Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 144 | திங்கட்கிழமை | சித்திரை 06 ஆம் நாள் 19 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 செய்தி : 021 493 0000
விலை : ரூ.30 விளம்பரம்: 021 493 1111

## நாய்க் கடிக்கு இலக்கான அராலிப் பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஏப்.19
நாய்க் கடிக்கு இலக்கான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். வட்டுக்கோட்டை, அராலி தெற்கைச் சேர்ந்த விஜயகுமார் பத்மா (வயது - 55) என்பவரே உயிரிழந்துள்ளார். 18 ➤

# கோத்தாபய அரசுக்கு வலுக்கிறது எதிர்ப்பு!

## அஸ்கிரிய பீடமும் போர்க்கொடி

கொழும்பு, ஏப்ரல் 19
கொழும்பு துறைமுக நகர விவகாரத்தால் அரசு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. ஏற்கனவே பங்காளிக்கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகள், பொருளாதார நெருக்கடி என திணறிவரும் அரசுக்கு கொழும்பு துறைமுக நகர விவகாரமும் தலையிடியாக மாறியுள்ளது. 18 ➤

## பல்கலை. நினைவுத் தூபி 23 ஆம் திகதி மீளத்திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மீள அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறக்கப்படவுள்ளது.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி பல்கலைக்கழக நிர்வாகத்தால் கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி இடித்து அழிக்கப்பட்டது. 18 ➤

## புலிகள் மீளுருவாக்கம்; கைதானோர் தடுப்பில்!

யாழ்ப்பாணம், ஏப்.19
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்க முயன்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்ட நால்வர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மேலதிக விசாரணைக்காக வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்படலாம் என்று கூறப்படுகின்றது. 18 ➤

## சகல பாடசாலைகளும் இன்று மீண்டும் திறப்பு

கொழும்பு, ஏப். 19
இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளும் இன்று மீண்டும் திறக்கப்படுகின்றன.
கடந்த 9ஆம் திகதி முதலாம் தவணைக்கான விடுமுறை வழங்கப்பட்டிருந்த நிலையில், இன்று முதல் இரண்டாம் தவணைக்கான கற்றல் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படுகின்றன என்று கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
'கடந்த மார்ச் மாதம் 29ஆம் திகதி மேல் 18 ➤

முச்சந்தி முரளி



“அகிம்சை முறையில போராடின அன்னை பூபதியையும் பயங்கரவாதிப் பட்டியலில சேர்த்திட்டினம் போல”

## அன்னை பூபதியின் சமாதியில் அஞ்சலி செய்தால் கைது!

### மிரட்டுகிறது பொலிஸ்

மட்டக்களப்பு, ஏப்.19
அன்னை பூபதியின் நினைவு தினத்தை அவரது சமாதிக்கு சென்று கடைப்பிடித்தால் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவீர்கள் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர் என்று அன்னை பூபதியின் மூத்த மகள் திருமதி லோகேஸ்வரன் சாந்தி தெரிவித்தார்.
மட்டக்களப்பில் உள்ள மட்டு ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே 18 ➤

## தனியார் கல்வி நிலையங்கள் இன்று முதல் இயல்புநிலைக்கு!

### மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 19
யாழ்ப்பாணத்தின் தனியார் கல்வி நடவடிக்கைகள் அனைத்தும் இன்றுமுதல் இயல்புநிலைக்குத் திரும்பும் என்று மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார். கல்வித்துறை தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு விடுக்கப்பட்ட தடை அடுத்த ஒரு வாரம் வரை நீடிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். 18 ➤

## மகன் தாக்கியதில் தந்தை உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப்.19
கிளிநொச்சியில் தாக்குதலுக்கு இலக்கான ஒருவர் உயிரிழந்தார். அவரது மகனே அவர் மீது தாக்குதல் நடத்தினார் என்று கூறப்படுகின்றது.
கிளிநொச்சி, கனகபுரத்தைச் சேர்ந்த நடராசா நாகேஸ்வரன் (வயது-53) என்பவரே உயிரிழந்துள்ளார். 18 ➤

## முத்தையா முரளிதரன் அப்பலோவில் சேர்ப்பு!

சென்னை, ஏப்.19
இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் சென்னை அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் நேற்றிரவு செய்தி வெளியிட்டுள்ளன.
மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள அவருக்கு ஆஞ்சியோ சிகிச்சை மேற்கொள்ளப்படவுள் 18 ➤

## கோடி ரூபா பெறுமதியான கஞ்சா இலுப்பைக்கடவையில் சிக்கியது!

### வவுனியாவைச் சேர்ந்த மூவர் கைது

மன்னார், ஏப்.19
மன்னார் இலுப்பைக்கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பி ஆறுப் பகுதியில் டிப்பர் வாகனம் ஒன்றில் மறைத்துக் கொண்டுசெல்லப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான கஞ்சா பொதிகள் நேற்று மன்னார் பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
கடற்படையின் புலனாய்வுத் 18 ➤

## நேற்றும் வடக்கில் 14 பேருக்குத் தொற்று

### யாழில் 13 பேர்

யாழ்ப்பாணம், ஏப்.19
யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் அதனை அண்டியுள்ள வர்த்தக நிலையங்களின் வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்கள் 11 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 18 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 பாடசாலைகளை உடைத்து

# 40 லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் திருட்டு

## பொலிஸாரிடம் சிக்கினர் சந்தேக நபர்கள்

**யாழ்ப்பாணம், ஏப்.19**

**யாழ்ப்பாணம், மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 9 பாடசாலைகளை உடைத்து 40 லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் கற்றல் உபகரணங்களைத் திருடிய குற்றச்சாட்டில் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை, முழங்காவில்,மற்றும் குமுழமுனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 வய துடைய இளைஞர்கள் மூவரே இவ் வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் இணைந்து கடந்த நான்கு மாதங் களில் யாழ்ப்பாணம், மானிப்பாய், காங்கேசன்துறை, சாவகச்சேரி மற் றும் பூநகரி பொலிஸ் பிரிவுகளில் உள்ள 9 பாடசாலைகளை இரவு வேளைகளில் உடைத்து பெறுமதி யான இலத்திரனியல் கற்றல் உபக ரணங்களைத் திருடியுள்ளனர். திரு டிய பொருள்களில் ஒரு பகுதியை விற்பனை செய்தும் உள்ளனர். செம்மணியில் வைத்து சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசார ணைகளின் அடிப்படையில் மேலும் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, புன்னாலைக்கட்டுவன் சித்திவிநா யகர் வித்தியாலயம், மாவிட்டபுரம் வீமன்காமம் மகா வித்தியாலயம், கைதடி கலைவாணி வித்தியால யம், கட்டுடை சைவ வித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் வித்தி யாலயம், கீரிமலை வலித்தூண்டல் றோ.க.த.க பாடசாலை மற்றும் பூநகரி மத்திய கல்லூரி ஆகிய வற்றிலேயே சந்தேக நபர்களால் பொருள்கள் திருட்டப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகளில், இரண்டில் இரு தடவைகள் திருட்டுப் போயுள் ளன.

ஒளி எறிவு படக் காட்டமைவு (புரஜெக்டர்), கணினிகள், அதிதிறன் பலகைகள் (ஸ்மாட் போட்),மற்றும் மடிகணினிகள் உள்ளிட்ட 40 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சந்தேக நபர்களிடமிருந்து கைப் பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் திருட்டுக்குப் பயன்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்ட பட்டா படி வாகனம் ஒன்று முழங்காவிலைச் சேர்ந்தவ ரிடமிருந்தும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரிடமிருந்து முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவையும் கைப்பற்றப்பட்டுள் ளன. பாடசாலை உபகரணங்களை அடையாளம் காண்பிக்க குறித்த பாடசாலை அதிபர்கள் அழைக் கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டு நீதி மன்றில் முன்னிலைப்படுத்த நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் உஜித் எம். பி. லியனகேயின் கீழான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஆர்.பிரதீப் தலைமையி லான அணியினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ள னர். (ப-26)

# நடிகர் விவேக்கிற்கு ஈழத்திலும் அஞ்சலி



வவுனியா,ஏப்.19

மறைந்த நடிகர் விவேக்கிற்கு ஈழத்திலும் பல பகுதிகளில், அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றுள் ளதுடன், இரங்கல்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. நடிகர் விவேக்கின் ஆத்மா சாந்தி நிகழ்வும் மர நடுகை நிகழ்வும், வவுனியா புதிய கற்பகபுரம் மைதானத்தில் கிராம அலுவலகர் சர்வேந்திரன் தலைமையில் நேற்று இடம்பெற்றன. இதன் போது விவேக்கின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத் தப்பபட்டது. அத்தோடு விவேக்கின் "ஒரு கோடி மரம் நடுவோம்" எனும் பெருங்கனவை நனவாக் கும் முகமாக மரக்கன்றுகள் நடுகைச் செயற் பாடும் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மரக்காரம்பளை கிராம அலுவலர் நா. ஸ்ரீதரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகு மார், சமூக ஆர்வலகர்கள், சுயாதீன இளைஞர் கள் அமைப்பின் உறுப்பினர்கள், இளைஞர்கள், மற்றும் கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை நடிகர் விவேக்கிற்கு ஈழத்த தமிழர் கள் சார்பில் வடக்கு மாகாண முன்னாள் உறுப்பி னர் எம்.கே. சிவாஜிலிங்கம் தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார். (ப-110)

# மாவை தொடர்பில் விக்கியின் பேச்சு நீதியே பிறழ்வடைவதற்கு ஒப்பானது

## காரைநகர் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19

மாவை, சேனாதிராசாவின் பெருந்தன்மையா லேயே முதலமைச்சர் ஆனேன் என அடிக்கடி கூறிவந்த முன்னைநாள் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் இன்று முதலமைச்சர் பதவிக்கு மாவை சேனாதிராசா தகுதியற்றவர் என பகீரங்க மாக கூறுவது நீதித்தன்மையே பிறழ்வாகிவிட்டதை சுட்டிக்காட்டுகின்றது என காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நீதியரசர் விக்னேஸ்வரன் தனது சேவைக்காலத்தில் எந்தவொரு தமிழ் மகனுக்கும் சேவைசெய்யாதவர் என்பது உலகில் வாழும் தமிழர்கள் ஒவ்வொருவ ருக்கும் நன்கு தெரியும். இதனை விட மேலாக அரசியலில் எந்தவொரு பங்கையும் வகிக்காத விக்னேஸ்வரனுக்கு ஆங்கிலம் தெரியும் என விழித்து அதனை முன்னிலைப்படுத்தி நீதியரசர் என்ற சொல்லுக்காக மாவை தனக்கு கிடைக்க விருந்த முதல்வர் பதவியைக் கூட தூக்கியெறிந்து விக்கியை முதல்வர் வேட்பாளராகக் கொண்டுவந் தார். உண்மையான ஜதார்த்தவாதி மாவை சேனா திராசாவே. இவ்வாறான மாவை சேனாதிராசாவை முன்னாள் முதலமைச்சர் விக்கி, அவரது நல்லூர் இல்லத்தில் வைத்து பேசும்போது கூட "அடுத்த தடவை மாகாண சபைத் தேர்தல் ஒன்று வருமா னால் அதனை முன்னிலைப்படுத்தி மாவையின் வெற்றிக்காக உழைப்பேன்" என்றார். ஆனால் இன்று அடுத்த தனது சுகபோக வாழ்க்கைக்காக மாவையை தட்டி வீழ்த்தி தான் வருவதற்கு குழைய டிக்கிறார் என்றார். (ப-50)

# இறந்த முதியவருக்கு கொரோனா; ஒட்டுசுட்டானில் பலருக்கு பி.சி.ஆர்

முல்லைத்தீவு, ஏப்.19

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் நகரப்பகுதி மற்றும் சின்னச்சாளம்பன் பகுதி ஆகியவற்றில் நேற்று பலருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அண்மையில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். அவரது இறுதிக் கிரியைக ளும் நடைபெற்று முடிந்தன. இறுதிக் கிரியைகளின் பின்னரே, அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகியிருந்தன. அதில் குறித்த முதியவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தமை தெரியவந்தது. இதனால், முதிய வரின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டவர்க ளுக்கு நேற்று பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (ப-19)

# கைகலப்பில் விரல் துண்டிப்பு

முல்லைத்தீவு, ஏப்.19

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் அமைந்துள்ள வாடியில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பெரும் பான்மை இனத்தைச்சேர்ந்த இரு குடும்பங்களுக்கு இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் ஒருவரின் கை விரல் ஒன்று துண்டாடப் பட்டது. காயமடைந்த அவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. கத்தி யால் வெட்டப்பட்டே விரல் துண்டாடப்பட்டுள்ளது என்று தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் ஒருவரைக் கைதுசெய்தனர். மேலதிக விசாரணை களையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. காட்டில் வெடிபொருள்கள் மீட்பு



முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படை புல னாய்வாளர்களின் தகவலின் அடிப்படையில் முல் லைத்தீவு சாலை காட்டுப்பகுதியில் இருந்து நேற்று ஒரு தொகுதி வெடிபொருள்கள் சிறப்பு அதிரடிப்படை யினரால் மீட்கப்பட்டுள்ளன.

60 மில்லிமீற்றர் மோட்டார் குண்டுகள் 8, 80 மில் லிமீற்றர் மோட்டார் குண்டுகள் 3, கைக்குண்டு 1, விடுதலைப்புலிகளின் தயாரிப்பு குண்டு 4, ஆர். பி.ஜி குண்டு 5 என்பவை மீட்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர். (ப-19)

# ஹெரோய்னுடன் இளைஞன் கைது

கொடிகாமம், ஏப்.19

150 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மீசாலையில் நேற்று இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீசாலை சோலையம்மன் கோவிலடியில் வைத்து சாவகச்சேரி பொலிஸாரால் அவர் கைதுசெய்யப் பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மேலதிக விசா ரணை களையும் பொலிஸார் முன்னெடுத்தனர். (ப-159)

# யானை தாக்கியதில் விவசாயி படுகாயம்

திருகோணமலை, ஏப். 19

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரி வுக்குட் பட்ட கடற்கரைச்சேனை பகுதியில் காட்டு யானையின் தாக்குதலில் வயோதிபரொருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற் றது.

மூதூர் கடற்கரைச்சேனை பகுதியைச் சேர்ந்த கே.சந்திரகுமார் (வயது 55) என்பவரே உயி ரிழந்தார் என்று தெரியவருகின்றது. கடற்கரைச் சேனை சம்புக்கலி பகுதியில் உள்ள அவரது வயலுக்குச் சென்றபோது யானை தாக்கியது எனவும் இதனையடுத்து சம்பூர் பிரதேச மருத் துவமனையிலிருந்து திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-இ)

# வேடம் போடுகின்றார் விஜயதாஸ ராஜபக்ச

## அலட்டிக்கொள்ள வேண்டாம் என்கின்றார் காவிந்த எம்.பி.

கொழும்பு, ஏப். 19

**நல்லாட்சி அரசில் நீதியமைச்சர் பதவியை வகித்து, ராஜபக்சர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச. இன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தன்னை அச்சுறுத்தினார் என்று கூறுகின்றார். அவர் முன் வினையின் பயனையே அனுபவிக்கின்றார். எனவே அவரது கருத்துத் தொடர்பில் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.**



இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது.

கொழும்பு துறைமுக நகர பொரு ளாதார ஆணைக்குழு சட்ட வரைவை அரசு நாடாளுமன்றில் சமர்ப்பித் துள்ளது. இதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்காத வகையில், பொது விடுமுறை காலத் தில் சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்டுள் ளது.

எனினும் அரசின் குறுகிய நோக்கம் வெற்றிபெறவில்லை. இந்தச் சட்ட வரைவுக்கு எதிராக பல மனுக்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.

இந்தச் சட்டவரைவு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜய தாஸ ராஜபக்ச குறிப்பிட்ட கருத் துக்கு ஜனாதிபதி அச்சுறுத்தியுள் ளார் என்று அவரே தெரிவித்துள் ளார். இதனைப் பெரிதுபடுத்துவது அவசியமற்றது. நீதியமைச்சர் பதவி வகித்த இவர், ஒரு தரப்பினருக்கு சார்பாக செயற்பட்டமை குறித்து இவரே பல முறை பகிரங்கமாக ஊடகங்கள் மத்தியில் குறிப்பிட்டுள் ளார்.

இவரது அரசியல் செயற்பாட்டை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். எனவே அரசின் முறையற்ற செயற் பாட்டுக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண் டும் - என்றார். (ம-4)

# ஜனநாயகத்துக்குப் பாதிப்பெனில் சுதந்திரக்கட்சி குரல் கொடுக்கும்

## லக்ஸ்மன் பியதாச தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 19

இலங்கை ஜனநாயகம் மிக்கதொரு நாடாகும். எனவே நாட்டின் ஜனநாயகத்துக்கு ஏதேனுமொரு வகையில் அச்சுறுத்தல் ஏற்படுமாயின், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதற்கு எதிராகப் போராடும் இவ்வாறு பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாச தெரி வித்தார்.

கொழும்பு துறைமுக நகர சர்ச்சை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டும். அதேவேளை நாட்டின் சுதந்திரம், இறையாண்மை, சுயாதீனத்தன்மை என்பவற்றையும் பாதுகாக்க வேண்டும். தற்போது புதிதாக கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான பிரச்சினை எழுந்துள்ளது. அது தொடர்பில் சுதந்திரக் கட்சி அவதானம் செலுத்தியுள்ளது. சட்ட வல்லுநர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் உள்ளிட்ட தரப்பினரின் நிலைப்பாடுகளை அறிந்து, அவற்றுக்கேற்ப சுதந்திரக் கட்சி செயற்படும். நாட்டின் இறையாண்மையையும், சுயாதீனத்தன்மையையும் பாதுகாக்க சுதந்திரக் கட்சி முழுமையான ஒத்து ழைப்பை வழங்கும் - என்றார். (ம-4)

# தடுப்பூசிப் பக்கவிளைவுகள் குறித்து மக்களுக்கு தெளிவூட்டல் அவசியம்

கொழும்பு, ஏப்.19

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தியதன் பின்னர் பக்கவிளைவுகள் காரணமாக பலர் இறந்துள்ளனர். அதற்கான சான்றுத் தகவல்கள் என்னிடம் உள்ளன என அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

பல நாடுகள் ஏற்கனவே இந்தத் தடுப்பூசி பயன்பாட்டை நிறுத்தி வைத் துள்ளன. இந்தத் தடுப்பூசி செலுத்தியதன் காரணமாக இரத்த உறைவு பற்றிய அறிக்கைகள் குறித்து என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை சுகாதார அமைச்சகம் மக்களுக்கு வெளிப் படுத்த வேண்டும். அத்துடன் தடுப்பூசியின் பக்க விளைவுகள் குறித்து சுகாதார அமைச்சு தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும் - என்றார். (ம-ச)



# கோழி இறைச்சி தட்டுப்பாடு

கொழும்பு, ஏப். 19

சந்தைகளில் கோழி இறைச்சிக்குத் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது. விற்பனைக்குப் போதுமா னளவு கோழி இறைச்சி கிடைக்காமையால், அதனை விற்பனை செய் யும் பல வர்த்தக நிலை யங்கள் மூடப்பட்டுள் ளன என்று தெரிவிக்கப் படுகின்றது. இது தொடர் பில் இராஜாங்க அமைச் சர் லசந்த தெரிவித்த தாவது:

இணங்கப்பட்டவாறு புத் தாண்டு காலப் பகுதி யில் கோழி இறைச்சி உற்பத்தி செய்யப்பட வில்லை. இதன் காரண மாகவே தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது. இந்த நிலை தொடருமாயின், நுகர் வோரின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, கோழி இறைச்சி தொடர் பான புதிய வர்த்தமா னியை வெளியிடும் நிலை ஏற்படும்- என்றார். (ம-4)

# முஸ்லிம்களுக்கு மட்டும் எதற்காக இந்தத் தடைகள்

## இம்ரான் எம்.பி. கேள்வி

திருமலை, ஏப். 19

கொரோனாவைக் காரணம் காட்டி, முஸ் லிம்களுக்கு மட்டும் தடைகள் விதிக்கப்படு வது ஏன்?. இவ்வாறு திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பினார் கிண்ணியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த அரசு ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம் கள் இனவாத ஒடுக்குமுறைக்கு ஆளாக் கப்படுவார்கள் என்று நாம் அன்றே எச்ச ரித்திருந்தோம். நாம் கூறியபடி தற்போது ஒவ்வொன்றாக நடந்து வருகின்றது.

அரசுக்கு மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்ப டும் சந்தர்ப்பங்களில், அவர்கள் முஸ்லிம்



களுக்கு எதிரான இனவாதத்தைக் கையி லெடுத்தே அந்த அதிருப்தியை மறைக் கின்றனர். உயிர்த்த ஞாயிறு அறிக்கை யில் பரிந்துரைக்கப்பட்ட சிங்கள அமைப் புக்கள் எதனையும் தடை செய்யாது முஸ்லிம் அமைப்புக்களை மாத்திரம் தடை செய்துள்ளனர். ரமழான் மாதத்தை முன் னிட்டு சுகாதார அமைச்சினால் முஸ்லிம் களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள் ளன. ஆனால் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மக்கள் கடை வீதிகளிலும், பொது இடங்களிலும் ஆயிரக்கணக்கில் சமூக இடைவெளி இன்றி ஒன்று கூடியதை நாம் கண்டோம். ஆனால் முஸ்லிம்களுக்கு மாத்திரம் தான் கொரோனா தொற்றுவது போன்று முஸ்லிம்களுக்கு மட்டும் தடை கள் விதிக்கப்படுவது ஏன் என்றே நாம் கேட்கின்றோம். மே மாதத்தில் கொரோனா வின் மற்றொரு அலை உருவாகலாம் என்று இராணுவத் தளபதி ஏற்கனவே அறிவித்து விட்டார். ஆகவே மே மாதத்தில் இடம்பெறும் பெருநாள் வியாபாரத்தை முடக்க அரசு திட்டமிட்டுள்ளதா என்ற சந் தேகம் இதனால் இப்போது எழுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு துறைகளிலும் முஸ் லிம்களை பழிவாங்கவே இந்த அரசு முயற்சிக்கின்றது - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அபிவிருத்தியே தற்கால அரசின் இலக்கு

## கூறுகின்றார் மஹிந்த அமரவீர



கொழும்பு, ஏப். 19

**நாட்டை அபிவிருத்தியடையச் செய்வதே எமது பிரதான இலக்காகும். இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக உருவாக்குவதற்கான பொறுப்பு ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரிடமும் உள்ளது இவ்வாறு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

கொழும்பு துறைமுக நகர ஆணைக் குழு சட்டவரைவு சர்ச்சை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிறந்துள்ள தமிழ் சிங்கள புத்தாண்டில் கடந்த காலத்தில், காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து புதிய பாதையில் பயணிக்க எதிர்பார்த்துள்ளோம். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வழிகாட்டலில், நாட்டின் மேம்பாட்டுக்கான வேலைத்திட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது எமது இலக்காகும். கொவிட் தொற்றின் காரணமாக ஏற்பட்ட நெருக்கடிகள் மற்றும் மேற்குலக நாடுகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் உள்ளிட்டவை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் இவை அனைத்தையும் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து நாட்டுக்கு உரித்தான விடயங்களை செயற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகவுள்ளது. எமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதும், ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதும் தற்போது எமது எதிர்பார்ப்பல்ல. எதிர்க்கட்சி கூறுவதைப் போன்று துறைமுக நகரத்துக்குள் பிரத்தியேகச் சட்டம், இராணுவத் தலையீடு என்று செயற்பட இடமளிக்க நாம் தயாராக இல்லை. நாம் எடுக்கும் தீர்மானம் நாட்டுக்குச் சாதகமானதாக அமையுமே தவிர, ஒரு போதும் நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது- என்றார். (ம-4)



# ஐந்து நாள்களில் 399 விபத்துக்கள்

## 52 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 19

கடந்த 5 நாள்களில் நாடு முழுவதும் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி, 52 பேர் உயிரிழந்துள்ளனர். 669 பேர் காயமடைந்துள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதிக்குள் 399 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

அவற்றால் 2 ஆயிரத்து 242 வாகனங்களும் சேதமடைந்துள்ளன. குறிப்பாக ஆயிரத்து 429 மோட்டார் சைக்கிள்களும், 552 முச்சக்கர வண்டிகளும் சேதமடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# நாடு திரும்புவோரை கட்டுப்படுத்த எந்த முடிவும் எடுக்கப்படவில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு. ஏப். 19

வெளிநாடுகளில் கொரோனாத் தொற்று காரணமாக சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கையை கட்டுப்படுத்துவதற்கு இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் மத்தியில் கொரோனாத் தொற்று எண்ணிக்கை அதிகரிப்பதால் இத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என்று தொற்று நோயியல் பிரிவு இயக்குநர் வைத்தியர் சுதத் சமரவீர நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்ததாவது:

"வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்களுக்கான தனிமைப்படுத்தல் வசதிகளையே அதிகரிக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவுறுத்தியுள்ளார்" - என்று தெரிவித்தார். (ம-ச)

# 1,834 பேர் கைது



கொழும்பு,ஏப்.19

பொலிஸாரின் விசேட சோதனை நடவடிக்கைகளில், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில், ஆயிரத்து 834 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மது போதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கைது செய்வதற்கான சிறப்பு நடவடிக்கைகள் கடந்த 13ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டன.

பிரதான வீதிகளின் நுழைவாயில்கள் மற்றும் வெளியேறும் இடங்களில் இந்தச் சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நேற்றுக் காலை 6 மணிவரை ஆயிரத்து 834 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் சோதனையில் நடவடிக்கைகள் இன்றும் முன்னெடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ம-4)

# கொரோனா கட்டுப்படுத்தலில் அரசாங்கம் வெற்றிகரம்

## சுகாதார அமைச்சர் பெருமிதம்




கொழும்பு, ஏப். 19

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் வெற்றிகரமாக மேற்கொள்கின்றது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகம் மூன்றாவது கொரோனா அலையை எதிர்கொள்கிறது. இதில் அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளமையால், தினசரி பதிவாகும் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய இறப்புகள் கணிசமாகக் குறைந்துவிட்டன. அத்துடன் தொற்றிலிருந்து மீண்டு வருவோரின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்துள்ளது.

எனவே கொரோனாத் தொற்று நெருக்கடியை வெற்றிகரமாக சமாளிக்கும் முயற்சிகளில் அரசாங்கம் தோல்வியுற்றது என்று எவரும் கூறவிட முடியாது - என்றார். (ம-ச)

# யானை தீ வைத்து எரிப்பு: நில உரிமையாளர் கைது



கொழும்பு, ஏப். 19

மொனராகலை, மாலிகாவில பகுதியில் பயிர்ச் செய்கை நிலமொன்றில் மின்சார கம்பியில் சிக்கி காட்டு யானை மற்றும் யானைக் குட்டி உயிரிழந்த சம்பவத்தை மறைப்பதற்காக நில உரிமையாளர் உயிரிழந்த யானையை தீ வைத்து எரித்து, அதன் குட்டியையும் புதைத்துள்ளார். சம்பவம் தொடர்பில் வன விலங்கு அதிகாரிகளுக்கு தெரியவந்துள்ளதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் நில உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-ச)

# 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு இவ்வாரத்துள் வழங்கப்படும்

கொழும்பு, ஏப். 19

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அரசால் வழங்கப்பட்டுவரும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இதுவரை வழங்கப்படாதவர்களுக்கு இன்று 19ஆம் திகதி முதல் குறித்த கொடுப்பனவு வழங்கப்படும் என்று சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்தார்.

எதிர்வரும் வாரத்துக்குள் இந்தக் கொடுப்பனவை வழங்கி நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:

தற்போது, இலங்கையில் ஆயிரத்து 73 சமுர்த்தி வங்கிகளில் 5 ஆயிரம் ரூபா என்ற சமூக பாதுகாப்பு நல உதவித்தொகையை அரசாங்கம் வழங்கி வருகிறது. தற்போதைய நிலையில் 23 லட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு தேவையான நிதி சமுர்த்தி வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது - என்றார். (ம-ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அர்த்தமுள்ள அஞ்சலி!

தமிழ்த் திரையுலகில் சிரிப்பாலும் சிந்தனையாலும் நிறைந்திருந்த 'சின்னக்கலைவாணர்' விவேக், தன் இறப்பின் பின்னரும் தமிழ்ச் சமூகத்தை சிந்தனைக்குள் தள்ளிவிடத் தவறவில்லை. மிகப் பெரும் சூழலியல் புரட்சியொன்று விவேக்கின் பெயரால் இன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

கொரோனாத் தொற்றுக்கு தடுப்பூசி போட்டுக் கொண்ட விவேக், மாரடைப்புக் காரணமாக நேற்று முன்தினம் உயிரிழந்தார். விவேக்கின் மறைவு தமிழ்த் திரையுலகை மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையும் துக்கத்துக்குள் ஆழ்த்தியுள்ளது. காரணம், விவேக் என்பவர் வெறுமனே ஒரு நடிகர் மட்டுமல்ல திரை என்பதற்கும் அப்பால் அவரின் சமூகவியல் சூழலியல் செயற்பாடுகள் மிகப்பெரியவை.

தனது மகனின் மறைவை அடுத்து அந்தப் பெருங் கவலையில் இருந்து மீண்டு வருவதற்காக 'மர நடுகை' என்பதைக் கையிலெடுத்தார் விவேக். தன் மக்கள் சுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காக கிடைக்கும் இடங்களையெல்லாம் மரங்களால் நிரப்பினார். இதையடுத்து இந்தியாவின் முன்னாள் குடியரசுக் தலைவரான அப்துல் கலாமின் ஆதரவு அவருக்குக் கிடைத்தது.


இதன் பின்னர் 'கிரீன் கலாம்' என்ற பெயரில் தன் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார் விவேக். ஒரு கோடி மரங்களை நடுவது என்பதை இலக்காகக் கொண்டு செயற்பட்டார். *33* லட்சம் மரங்கள் நடப்பட்டிருந்த நிலையில் விவேக் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டுள்ளார்.

விவேக்கின் மறைவை அடுத்து வெளிவந்துள்ள இரங்கல் குறிப்புக்களில் எல்லாம், அவர் நட்டுச் சென்ற மரங்கள் பற்றிய குறிப்புக்கள் இல்லாமலில்லை. விவேக்கின் படங்களை விடவும், அவர் நட்டுச் சென்ற மரங்கள்தான் தற்போது அவரைப் பற்றி அதிகம் கதை பேசுகின்றன.

விவேக் மறைந்ததை அடுத்து வெறுமனே இரங்கல் குறிப்புக்களுடன் அவருக்கான மரியாதை நின்று விடவில்லை. இரங்கல் குறிப்புக்களைத் தாண்டி ஏகப்பட்ட மரங்கள் இன்று விவேக்கின் பெயரால் நடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அடுத்த சில தினங்களில் ஒரு லட்சம் மரங்களை விவேக்குக்காக நடுவதுதான் தற்போது இலக்காக உள்ளது. இதில் இன்னுமொரு குறிப்பிடக்கூடிய விடயம் என்னவெனில், வெறுமனே இந்தியாவுடனோ அல்லது தமிழ் நாட்டுடனோ நின்றுவிடாமல் கடல்கடந்து இலங்கை மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் உள்ள விவேக்கின் ரசிகர்களும் இந்த மரநடுகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இறப்பால் மட்டும் ஒருவரை அழித்துவிட முடியாது என்பதற்கு விவேக் ஒரு நடைமுறை உதாரணம். அவர் விட்டுச்சென்ற சிரிப்பு மட்டுமல்ல மரநடுகையும், அதனால் பசுமையால் போர்த்தப்படப்போகும் உலகமும் என்றென்றும் விவேக்கை நினைத் துக் கொண்டே இருக்கும். இதுவே ஒரு அர்த்தமுள்ள சாவுக்கான அடையாளம். அதேபோன்று அவர் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து ஒருகோடி மரங்களால் இந்த உலகை நிரப்புவது அவருக்கான அர்த்தமுள்ள அஞ்சலியுமாகும்.




# மாநகர கட்டளைச் சட்டத்தை மொழிபெயர்க்கவில்லை மனோ

### குற்றம்சாட்டுகின்றார் உமாச்சந்திர பிரகாஷ்

**யாழ்ப்பாணம், ஏப். 19**

**மாநகர கட்டளைச் சட்டங்களை தமிழில் மொழி பெயர்ப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணங்கினார். எனினும், அமைச்சர்களாக இருந்த மனோ கணேசன் மற்றும் பைசர் முஸ்தபா ஆகியோர் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை .**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவரின் இணைப்புச் செயலாளருமான உமாச்சந்திரபிரகாஷ் குற்றஞ்சாட்டினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நல்லாட்சியில் நான் கொழும்பு மாநகர சபை உறுப்பினராக இருந்தபோது மாநகர கட்டளைச் சட்டங்களை தமிழில் மொழி பெயர்ப்புச் செய்வற்கு பல வழிகளிலும் முயன்றேன். அப்போதைய நல்லாட்சி அரசில் அரச கரும மொழி அமைச்சராக இருந்த மனோ கணேசனிடம் பல தடவைகள் இது பற்றிக் கூறியிருந்தேன்.

அதுமட்டுமல்லாது அப்போதைய உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சராக இருந்த பைசர் முஸ்தப்பாவிடம் பல தடவைகள் எழுத்து மூலமும் கோரியிருந்தேன். இவர்கள் இருவரும், யார் இதைச் செய்வது? எந்த அமைச்சு ஊடாக மொழிபெயர்ப்பதற்கான நிதியை ஒதுக்குவது? என ஆராய்ந்தே காலத்தைக் கடத்தி விட்டார்கள். இது பற்றி அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைத் தயாரிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை ஜனாதிபதி கேட்டிருந்தார். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. கொழும்பு மாநகர கட்டளைச் சட்டத்தின் இணைப்புப் பிரிவுகளை மட்டும் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தார்கள். அதனால் என்ன பயன்?. - என்றார்.

யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் காரணமாக இருந்தார் என்ற செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை. ஆகவே அரசு, தனக்குத் தேவையானவற்றை விரும்பிய நேரத்தில் நிறைவேற்ற முற்படுவதே இதன் மூலம் புலப்படுகின்றது. - என்றும் அவர் தெரிவித்தார். (ம-த-20)

# அபிவிருத்தித் திட்டங்களுக்கு கூட்டமைப்பினர் ஒத்துழைப்பு

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.19

அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது என்று வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நாம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களோடும், திணைக்களங்களுடனும் பேச்சுக்களை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவர்களின் ஒத்துழைப்பு நன்றாகவே கிடைக்கின்றது என்பதைக் குறிப்பிட முடியும்.

உண்மையில் வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றனர். மக்களுக்கான செயற்றிட்டங்களில் அவர்கள் ஒத்துழைப்புடன் செயல்படுகின்றனர். ஆனால் கிழக்கு மாகாணத்தில் அவ்வாறான நிலை காணப்படவில்லை. என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்கள் ஒருபோதும் நாட்டை காட்டிக்கொடுக்கார்

## புகழ்பாடுகிறார் நிமல் லான்சா

**கொழும்பு, ஏப். 19**

**ராஜபக்சக்கள் நாட்டை ஒருபோதும் காட்டிக் கொடுக்கவில்லை. சர்வ தேசத்திடமிருந்து நாட்டை பல முறை பாதுகாத்தவர்கள் அவர்கள் தான். நெருக்கடியான சூழ்நிலையிலும் நாட்டின் சுயாதீனத்தன்மையை அவர்கள் விட்டுக் கொடுத்ததில்லை**

இவ்வாறு கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவு விவகாரம் தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. தவறான விடயங்களை முன்னிலைப்படுத்தி, அதனூடாக அரசியல் இலாபம் தேடிக்கொள்ள ஆளும் தரப்பின் ஒருசில உறுப்பினர்களும், எதிர்க்கட்சியினரும் முயற்சிக்கின்றனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் மீது நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்களை வைத்துள்ளனர். 30 வருடங்கள் போரை நிறைவுக்குக் கொண்டு வந்து, தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திய கௌரவத்தை நாட்டு மக்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு இன்றும் வழங்குகின்றனர்.

கொழும்பு துறைமுக நகரம் சீனக் காலனித்துவ ஆட்சிக்குள் கொண்டுவரப்படும் என்று கூறப்படும் கருத்துத் தவறானதாகும். துறைமுக நகரம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைக்கு அரசு, உரிய தீர்வை வழங்கும். இது தொடர்பில் அனைத்து தரப்பினருடன் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும்- என்றார். (ம-4)

# பம்மாத்து அரசியலால் பாதாளத்துக்குள் மக்கள்

## கூறுகின்றார் அனுஷா

கொழும்பு, ஏப். 19

மக்களைப் பற்றி துளியேனும் கவலைப்படாத ஒரு சில மக்கள் பிரதிநிதிகள், சாணக்கியமற்ற அரசியல் பம்மாத்துகளை நடாத்துவதால், வாக்களித்த மக்களின் பொருளாதார நிலை அதள பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இவ்வாறு மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனா காரணமாக கடந்த ஆண்டு முழுவதுமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் இப்போதுதான் பொருளாதார ரீதியில் ஸ்திரத்தன்மையை அடைய ஆரம்பித்துள்ளனர்.

மலையகத்திலிருந்து நாடாளுமன்றம் சென்ற ஒருசில வெத்து வேட்டுகளாலேயே மக்களின் பொருளாதார நிலை அதள பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இதுவரையில் இவர்கள் மக்களுக்காக என்ன சேவைகளைச் செய்து விட்டார்கள்? வெறுமனே மேடைகளில் பேசி காலத்தைக் கடத்துபவர்களிடமிருந்து இதைவிட வேறென்ன எதிர்பார்க்க முடியும்? என்றார். (ம-4)

# ஹொங்கொங் போன்று இங்கு ஆள முடியாது


கொழும்பு, ஏப். 19


எமது நாட்டை ஹொங்கொங் போன்று ஆள முடியாது என்று தேசிய மரபுரிமைகள், கலை, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் சட்டம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் ஹொங்கொங் போன்ற தனி நிர்வாகப் பிரிவை நாட்டில் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. முதலீட்டாளர் யார் என்பது முக்கியமல்ல. நிலம் தொடர்பான சட்டம் அனைவருக்கும், எல்லா இடங்களுக்கும் பொருந்தும்.

அத்துடன் இந்த நடவடிக்கைகள் மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டமையால் அது நாட்டின் முன்னேற்றத்துக்குப் பெரும் உத்வேகத்தை அளிக்குமென்று நம்புகின்றேன். - என்றார். (த-இ)





பெலியத்தையிலிருந்து பயணித்த ரயில் ஒன்று காலி தொடருந்து நிலையத்துக்கு அருகில் தடம் புரண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கரையோர தொடருந்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# வெளிநாடுகளின் கபளீகரத்திலிருந்து இலங்கை விடுபட வேண்டும்

## அதாவுல்லா தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.19



வெளிநாடுகளின் வங்குரோத்து கபளீகரத்தில் இருந்து இலங்கை விடுபட வேண்டும். ஐரோப்பா போன்ற நாடுகள் உட்பட இலங்கையைச் சுற்றியுள்ள நாடுகளும் நம் தேசத்தையே வேண்டும் என்று சொல்கின்றன.

இவற்றுடன் இலங்கை அடிபட முடியாது.

இவ்வாறு தேசிய காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையை சுதந்திரத்துக்கு முன்னர் ஒல்லாந்தர் மற்றும் போர்த்துக்கேயர் ஆக்கிரமிப்புச் செய்தனர். தற்போது மறைமுகமாக அது நடக்கின்றது. அப்பாவி முஸ்லிம்களையும், அப்பாவி கிறிஸ்தவர்களையும் நமது நாட்டில் குழப்பியடித்து இனவஞ்சமும், வர்மத்தையும் தோற்றுவித்துள்ளனர். எனவே வெளிநாட்டு அழுத்தங்கள் இல்லாமல் யாப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். என்றார். (ம-4)

# திருட முற்பட்டாரென்று பொலிஸில் ஒப்படைப்பு

## அவரிடமிருந்து இடியன் மீட்பு

கிளிநொச்சி, ஏப். 19

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி மாயனூர் பகுதியில் நேற்று இரவு திருட்டு முயற்சியில் ஈடுபட்டார் என்று குற்றம்சாட்டி ஒருவரை அந்தப் பகுதி மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவரிடமிருந்து இடியன் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது என்றும் அவர் விசாரணையில் உள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-113)

# இரண்டாவது 'டோஸ்' இன்றே தீர்மானம்

கொழும்பு, ஏப். 19

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா இரண்டாம் 'டோஸ்' தடுப்பூசியின் எந்தக் காலத்தில் செலுத்துவது என்பது தொடர்பில் இன்று தீர்மானிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் தீர்மானிப்பதற்கு தடுப்பூசி தொடர்பான நிபுணர் குழுவினர் தொற்று நோய் தடுப்பு பிரிவில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கூடவுள்ளனர். அதில் தடுப்பூசியின் இரண்டாவது 'டோஸை' 10 வாரங்களிலா அல்லது 12 வாரங்களிலா செலுத்துவது என்பது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அதேவேளை நாட்டில் இதுவரை 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸாத் சாலிக்கு மீட்சி இல்லை ஆரம்பமானது சிறப்பு விசாரணை!

## சி.ஐ.டி., ரி.ஐ.டி. இணைந்து துருவல்

கொழும்பு, ஏப். 19

'அஸாத் சாலி நாட்டில் தீவிரவாதத்தை வளர்த்துப் பாதுகாத்தாரா என்பது தொடர்பான விவரங்களை அறிய சி.ஐ.டி. மற்றும் ரி.ஐ.டி. ஆகியவை இணைந்து சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அஸாத் சாலி மேல் மாகாண ஆளுநர் பதவியில் இருந்தவேளையில் தீவிரவாதத்தை வளர்ப்பதற்கும், அது தொடர்பான பிரசா ரங்களை மேற்கொள்வதற்கும் எவ்வாறு பாடுபட்டார் என்பது குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக சி.ஐ.டி. மற்றும் ரி.ஐ.டி. இணைந்து சிறப்பு விசாரணைகளைத் தொடங்கியுள்ளன. மாவனெல்லயில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட விவகாரம் மற்றும் வணாத்தவில்ல பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைப் பாதுகாத்த குற்றச்சாட்டில் முன்னாள் ஆளுநருக்கு எதிராக ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மேலும், முஸ்லிம் பள்ளிவாசல்கள், உள்ளூர் மதரஸாக்களில் தீவிரவாதக் கருத்துக்களைப் பரப்புவதற்கு உதவினார் போன்ற குற்றச்சாட் டின் பேரிலும் அஸாத் சாலி விசாரிக்கப்படுகின்றார்' - என்றார். (ம-22)

வதங்கிய இதயத்திலிருந்து சொரியும்

13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இந்துஜா விஜயகுமார்



தாயின் மடியில்
27.06.2003

பிரமத்தின் இல்லத்தில்
19.04.2008

அன்பின் உறைவிடமே
அழகின் உயர்விடமே
உன் மழலை மொழி கேட்டு
13 ஆண்டுகள்
– உருண்டோடினாலும்
என்றும் உன் நினைவுடனே
– நடைப்பிணமாய்
அலைகின்றோம்
மகளே இந்துஜா
அமைதி கொள்வாய்.

கொம்மாந்தறை,
வல்வெட்டித்துறை

அம்மா, அப்பா, தம்பி
மற்றும் குடும்பத்தினர்
077 054 2908



# கொரோனாத் தடுப்பூசிகள் விரைவில் வந்தடையும்!

## அரசு நம்பிக்கை

கொழும்பு, ஏப். 19

'ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா' தடுப்பூசியின் அடுத்த தொகுதி ஏப்ரல் இறுதியில் அல்லது மே மாத தொடக்கத்தில் நாட்டை வந்து சேரும் என்று கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

அத்தோடு ரஷ்யாவின் 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசியையும் குறித்த காலப்பகுதியில் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருக்கிறோம் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில், கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதன் காரணமாக 'அஸ்ட்ராஜெனகா' தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் நிலவுகின்றது எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம-22)

# கௌரவத்தை இழக்காது பதவியை ஒப்படைக்குக!

## ஜனாதிபதிக்கு மேர்வின் ஆலோசனை



கொழும்பு, ஏப். 19

**செய்யும் தொழில் பற்றி அறியாவிட்டால், ராஜபக்சக்களின் கௌரவத்துக்கு இழுக்கை ஏற்படுத்தாமல், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியை ஒப்படைத்து விட்டுச் செல்ல வேண்டும். ஜனாதிபதி என்ற பதவியின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும்.**

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நல்லாட்சி அரசில் கோத்தாபய ராஜபக்சவைக் கைது செய்வதற்கு முயற்சிகள் இடம்பெற்றபோது, அது சட்டத்துக்கு முரணான செயற்பாடு என்று தெரிவித்து அவரை சிறைவாசத்திலிருந்து பாதுகாத்தவர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ச. அவ்வாறான நபருக்கு அச்சுறுத்தல் விடுவது பொருத்தமற்றது.

இவ்வாறான பொருத்தமற்ற நடத்தைகளை ஜனாதிபதி மாற்றிக்கொள்ள வேண்டும். ஜனாதிபதியொருவர் பேசக்கூடிய முறைமையிலிருந்து விலகி தரமற்ற வகையில் விஜேதாச வுடன் தொலைபேசியில் பேசியுள்ளார். தங்களுக்கு ஜனாதிபதி பதவியும் தற்காலிகமானது என்பதை மறந்து விட வேண்டாம்.

மனிதாபிமானமே நிரந்தரமானது. எனவே தயவு செய்து இவ்வாறான நடத்தைகளை மாற்றிக் கொள்ளுங்கள். ஒரு மனிதனாகச் செயற் படுங்கள் - என்றார். (ம-4)

# வீசிவிட்டுச் சென்ற மருத்துவக் கழிவுகளை மீள எடுத்துச் சென்ற மருத்துவமனையினர்

## வவுனியாவில் நேற்றுச் சம்பவம்

வவுனியா, ஏப். 19

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் மருத்துவக் கழிவுகளை வீசினார் என்று குற்றஞ்சாட்டி அந்தப் பகுதி மக்கள், நேற்று ஒருவரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான மருத்துவ ஆய்வுகூடம் ஒன்றின் ஊசிகள், குருதிப் பரிசோதனைக் கண்ணாடிகள், சிறிஞ், பஞ்சுகள், மருந்து குவளைகள் மற்றும் மருத்துவ சிட்டைகள் ஆகியவை உள்ளிட்ட மருத்துவ கழிவுகளை வைரவ புளியங்குளம் குளத்தின் குளக்கட்டு வீதிப் பகுதியில் நபர் ஒருவர் வீசி விட்டுச்சென்றுள்ளார். இதனை அவதானித்த அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் குறித்த கழிவுப் பைகளை எடுத்து சோதனையிட்டபோதே அவற்றில் மேற்படி கழிவுகள் இருந்தமையை அவதானித்தனர்.

மீட்கப்பட்ட சிட்டையில் இருந்த குறித்த மருத்துவ ஆய்வுகூட இலக்கத்துக்கு அலைபேசி அழைப்பை ஏற்படுத்தி குளக்கட்டுப் பகுதிக்கு வரவழைத்துள்ளனர். இதன்போது தாம் மருத்துவ கழிவுகளை வீசியதை குறித்த ஆய்வுகூடத்தினர் ஏற்றுக்கொண்டனர். அத்துடன் தாம் வீசிய மருத்துவ கழிவுகளை மீள எடுத்தும் சென்றனர்.

பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் பொது இடத்தில் மருத்துவ கழிவுகளை வீசியமை தொடர்பில் வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தின் தமிழ் மொழி முறைப்பாட்டு பிரிவுக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் குறித்த இடத்தை பார்வையிட்டதுடன், குறித்த நபருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்படும் எனக் கூறி அவரை அழைத்துச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-18)



# நீரில் மூழ்கி சிறுவர்கள் இருவர் சாவு

கொழும்பு, ஏப். 19

குளத்தில் நீராடச் சென்ற இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் உள்ள பரவிப் பாஞ்சான் குளத்தில் நேற்று நடந்துள்ளது.

முள்ளிப்பொத்தானைப் பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுவர்களே உயிரிழந்தவர்களாவர். சடலங்கள் கந்தளாய் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோ:ஃபா டெல் ரே கிண்ணம்- சம்பியனானது பார்சிலோனா!

**ஸ்பெயின், ஏப். 19**

**மெஸ்ஸிலியின் அபார ஆட்டத்தால் 4- 0 என்ற ரீதியில் அத்லெட்டிக் பில்பாவோ அணியை வீழ்த்தி கோஃபா டெல் ரே வெற்றிக் கிண்ணத்தை ஐந்தாவது முறையாகச் சுவீகரித்தது பார்சிலோனா அணி.**



இந்த உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அண்மைக்காலமாக இறுதிப்போட்டிகளில் தடுமாறி வெற்றிக்கிண்ணங்களைத் தவறவிட்ட பார்சிலோனா அணி நேற்று அதிக உத்வேகத்தோடு, பில்பாவோ அணிக்கு ஆரம்பம் முதலே சவால் விடுக்கும் வகையில் விளையாடியது. குறிப்பாக பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸியும், ஜோர்டி அல்பாவும் கூட்டணிஅமைத்து, பில்பாவோ அணியின் எல்லா வியூகங்களையும் தகர்த்தெறிந்து, அணியின் வெற்றிக்கு வழியமைத்தனர். இந்தக் கூட்டணியின் தாக்குதலுக்கு முன்னால் பில்பாவோ அணி தற்காப்பு ஆட்டத்தையே ஆடமுடிந்ததே தவிர, கோல் எதனையும் பெறமுயலவில்லை. இந்த நிலையில் 4-0 என்ற ரீதியில் பார்சிலோனா கோஃபா டெல் ரே கிண்ணத்தைத் தனதாக்கியது.

இதில் மெஸ்ஸி இரண்டு கோல்களையும், அன்ரனியோ கிரீஸ்மன், ப்ராங்கி டீ ஜோங் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களையும் அடித்து வெற்றிக்கு அடிகோலினர். (அ)




# இறுதிப்போட்டியில் செல்சி

வெம்ப்ளி, ஏப்.19

பரபரப்பான அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெற்று, இங்கிலாந்து உதைபந்தாட்டச் சங்க சவால் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு செல்சி அணி முன்னேறியுள்ளது.

வெம்ப்ளியில் நேற்று முன் தினம் நடைபெற்ற மன்செஸ்டர் சிற்றியுடனான் அரையிறுதிப் போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் வென்றதன் மூலம் செல்சி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹக்கிம் ஸியெச் அடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# டோனியை முந்திய ரோஹித்

சென்னை, ஏப்.19

ஐ.பி.எல் போட்டிகளில் அதிக சிக்ஸர்களை விளாசியவர்கள் பட்டியலில் மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவர் ரோஹித் சர்மா மூன்றாம் இடத்துக்கு முன்னேறினார்

இந்தப்பட்டியலில் முதல் இரண்டு இடங்களிலும் பஞ்சாப் வீரர் கிறிஸ் கெய்ல்( 351 சிக்ஸர்கள்),பெங்களூர் வீரர் டிவில்லியர்ஸ் (237 சிக்ஸர்கள்) ஆகியோர் உள்ளனர்.

மூன்றாம் இடத்தில் இதுவரை சென்னை அணித்தலைவர் டோனியே இருந்தார். அவர் 216 சிக்ஸர்களை ஐ.பி.எல் போட்டிகளில் அடித்திருந்தார். அவருக்கு அடுத்த இடத்தில் ரோஹித் சர்மா 215 சிக்ஸர்களோடு காத்திருந்தார்.

இந்த நிலையில் ஹைதராபாத் அணிக்கு எதிராக நேற்று முன் தினம் நடைபெற்ற போட்டியில் 2 சிக்ஸர்களை எல்லைக் கோட்டுக்கு வெளியே அனுப்பி , அதிக சிக்ஸர்களை ஐ.பி.எல் போட்டிகளில் அடித்தவர்கள் பட்டியலில் டோனியை முந்திக் கொண்டு மூன்றாம் இடத்துக்கு முன்னேறினார் ரோஹித்.

ஆனாலும் தொடர்ந்து வரும் போட்டிகளில் டோனி சிக்ஸர்களை தெறிக்க விட்டால் , மீண்டும் பட்டியலில் மூன்றாம் இடத்துக்கு முன்னேறும் வாய்ப்புகள் அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஒத்திவைக்கப்படாது ஒலிம்பிக் போட்டி!

*அமைப்புக் குழுத் தலைவர் உறுதி*

" எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டி ஒத்திவைக்கப்படாது" என்று ரோக்கியோ ஒலிம்பிக் போட்டி அமைப்புக்குழுவின் தலைவரான ஷிகோ ஹசி மோட்டோ திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வான ஒலிம்பிக் போட்டிகள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகின்றன. இறுதியாக 2016ம் ஆண்டு பிரேசிலில் உள்ள ரியோ டி ஜெனிரோவில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. இந்த நிலையில் கடந்தவருடம் ஜப்பானின் ரோக்கியோ நகரில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் கொரோனா அச்சுறுத்தல் உலகெங்கும் நிலவியதால் , ஒலிம்பிக் போட்டியை கடந்த வருடம் திட்டமிட்டபடி நடத்தமுடியாமல் ஒத்திவைக்கும் நிலை எழுந்தது. இதனையடுத்து இந்த வருடம் ஜுலை 23 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 8ஆம் திகதி வரை ஒலிம்பிக் போட்டிகளை ரோக்கியோவில் நடத்த முடிவு செய்யப் பட்டிருந்தது. ஆயினும் கொரோனாவின் இரண்டாம் அலை விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில், மீண்டுமொருமுறை ஒலிம்பிக் போட்டிகள் ஒத்திவைக்கப்பட லாம் என்று தகவல்கள் வெளியாகியி ருந்தன.

இந்தநிலையிலேயே அந்த ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கருத்து வெளியிட்ட ரோக்கியோ ஒலிம்பிக் போட்டி அமைப்புக்குழுவின் தலைவரான ஷிகோ ஹசி மோட்டோ " ரோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு இடை யூறாக பல்வேறு கவலை அளிக்கும் விஷ யங்கள் நடைபெற்றாலும், போட்டியை ஒத்திவைப்பதைப்பற்றிநாங்கள் சிந்திக்கவே இல்லை. திட்டமிட்டபடி வெற்றிகரமாக ரோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தி முடிப்போம் என்ற நம்பிக்கை எமக்குண்டு " என்று தெரிவித்துள்ளார். (அ)


# எனக்கு வயதாகி விட்டது

## டோனி

மும்பை, ஏப்.19


சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக எம்.எஸ். டோனி 200 ஆவது போட்டியை பஞ்சாப் அணிக்கெதிராக ஆடினார். பலம் வாய்ந்த பஞ்சாப் அணியை மிக இலகுவாக வென்று, தன் 200 ஆவது போட்டியை அணித்தலைவராக வெற்றிகரமாக தாண்டினார் டோனி. இந்தநிலையில்"சென்னை அணிக்காக 200 போட்டிகளில் விளையாடிய முதல் வீரர் என்ற மைல்கல்லை அடைந்தமை குறித்து எப்படி உணர்கிறீர்கள்?" என்று டோனியிடம் வர்ணனையாளர்கள் கேட்டனர்.


அதற்கு டோனி புன்சிரிப்போடு " எனக்கு வயதாகி விட்டதாக உணர்கிறேன்" என்று பதிலளித்துள்ளார். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடி, மின்னல்களுக்கு ஏனிந்த இரத்தவெறி?





குமாரதாஸன் (பாரிஸ்)

முல்லைத்தீவில் கடந்த 15 ஆம் திகதி மூவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர். கடந்த ஆண்டிலும் யாழ்ப்பாணத்தில் மின்னல் தாக்குதலால் பல மரணங்கள் நிகழ்ந்தன. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஆண்டு தோறும் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்துகின்ற இயற்கைச் சீற்றமாக இடி மின்னல் மாறி வருகின்றது.

முன்பொரு காலத்தில் உயர்வான இடங்களை மட்டுமே இலக்குவைத்து வந்த இடி மின்னல்கள் இப்போதெல்லாம் மனிதர்களது தலைவரை வந்து தாக்குகின்றன.

### இதற்குக் காரணம் என்ன?

தரைக்கும் முகில்களுக்கும் இடையிலான ஒரு மின்சாரத் தெறிப்பே மின்னல் தாக்குதல். இது வளிமண்டலத்தில் இயற்கையாக ஏற்படுகின்ற நிகழ்வுதான் என்றாலும் பருவநிலை மாற்றத்தால் மின்னலும் ஏனைய இயற்கைச் சீற்றங்கள் போன்று மாறுதலடைந்து வருகின்றது. பூமியின் வெப்பம் அதிகரித்து வருவதே மின்னல்கள் வீரியமடையக் காரணம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். புயல் மேகங்களுக்கு இடையே சாதாரணமாக ஆயிரக்கணக்கில் இடி மின்னல்கள் நிகழ்ந்தாலும் அவற்றில் அரிதாகச் சில மின் கடத்தல்களே தரையைத் தாக்குகின்றன. ஆனால் மனித நடவடிக்கைகள் காரணமாக வெப்பம் அதிகரித்து வளிமண்டலம் அதிகளவு ஈரப்பதன் கொண்டதாக மாறுவதால் மின்னலின் தாக்கம் தரையை நோக்கிக் கடத்தப்படுவது "வழமைக்கு மாறாக" அதிகரித்து வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் மின்னல் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாக காட்டும் ஆய்வு ஒன்றை ஜேர்னல் சயன்ஸ் (journal Science) சஞ்சிகை அண்மையில் வெளியிட்டிருந்தது.

"ஒவ்வொரு ஒரு பாகை செல்சியஸ்(1C) வெப்பநிலை அதிகரிப்புக்கும் மின்னல் தாக்குதல்கள் 12 வீதம் அதிகரிக்கின்றன. இதன் அர்த்தம் அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்த நூற்றாண்டின் இறுதியில் மின்னலின் தாக்கங்கள் 50 வீதத்தால் உயரும் என்பதாகும்" என்று அதில் தெரிவிக்கப்படுகிறது.


2010 2020 காலப்பகுதியில் வெப்பம் அதிகரிப்பை ஆய்வு செய்த வோஷிங்டன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் பூமியின் ஆர்ட்டிக் பகுதி வட்டகை நாடுகளான வடக்கு ரஷ்யா, கனடா, அலாஸ்கா, ஐரோப்பா பகுதிகள் அதிக மின்னல் தாக்குதல்களைச் சந்திக்கத் தயாராகவேண்டும் என்று எச்சரித்துள்ளனர். இந்தப்பகுதியில் 2010 ஆம் ஆண்டு 15 ஆயிரமாகக் கணக்கிடப்பட்ட மின்னல் தாக்குதல்கள் 2020 இல் ஒரு லட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்துள்ளன.

" பூமியின் இதர பகுதிகளை விட ஆர்ட்டிக் பிரதேசமே வேகமாக வெப்பமடைந்து வருகிறது. நீண்ட காலமாக கடலில் பனி உருகிவருவதும் அதிகமான கப்பல் போக்குவரத்துகளும் ஏற்படுத்தப் போகின்ற இடி, மின்னல், புயல் மழை ஆபத்துக்களை ஆர்ட்டிக் நாடுகளில் வசிப்போர் அறியாதவர்களாக உள்ளனர்"என்று அறிவியலாளர் ஒருவர் எச்சரிக்கிறார்.

மின்னல் தாக்கம் ஏற்படுத்தும் பாரதூரமான அழிவாக காடுகள் தீக்கிரையாவதைச் சொல்லலாம். இதனால் காட்டு விலங்குகளும் தாவர இனங்களும் அழிகின்றன. இதைவிடச் சமீப காலமாக மனித உயிரிழப்புகள் அதிகரிக்கின்றன. இந்தியாவின் வறிய மாநிலமான பீஹாரில் கடந்த வருடம் கோடையின்போது பத்து நாள்களில் 147 பேர் மின்னல் தாக்கி உயிரிழந்தனர். உலகை திரும்பிப் பார்க்கவைத்த மிக அதிக உயிர்ச் சேதம் இதுவாகும்.

கிராமவாசிகளும் கமக்காரர்களுமே அதிக எண்ணிக்கையில் உயிரிழக்கின்றனர். வெளியான இடங்களைத் தவிர்த்தல் போன்ற பொதுவான பாதுகாப்பு ஆலோசனைகளால் அல்லது இடி தாங்கிகள், மின்னல் கண்டறி கருவிகள் (lightning detection systems) போன்றனவற்றால் மட்டும் இனி மின்னலால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுத்துவிட முடியாது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆகவே அதிகரிக்கப் போகும் மின்னல் தாக்குதல்களில் இருந்து எம்மைத் தற்காத்துக் கொள்ளும் வழிகளைக் கண்டறிவதோடு, இயற்கையை வெப்பமாக்கி அதனைக் கோபப்படுத்தாமலிருப்பதும் மின்னலால் உண்டாகும் ஆபத்துக்களைக் குறைக்க வழி செய்யும். ■






# பத்மாசனம் (தாமரை மலர் போன்ற தோற்றம்)




**இவ்வாசனம் தூய்மை மற்றும் (சமச்சீர்) சமநிலை ஆகியவற்றின் அடையாளமாக விளங்குகின்றது.**

### செய்(படி)முறைகள்:

1. நேராக நிமிர்ந்து உட்கார்ந்து இரு கால்களையும் நேராக நீட்டவும். பாதங்கள் இரண்டும் இணைந்தி ருக்கத்தக்கவாறு உள்ளங்கைகளை புட்டப்பகுதியின் இரு பக்கங்களும் தரையில் வைக்கவும்.
2. வலது காலை மடக்கி வலப்பாதத்தை இடது தொடைமீது அடிவயிறு சேருமிடத்தில் வைக் வும்.
3. இடது காலையும் மடக்கி இடப்பாதத்தை வலது தொடைமீது அடிவயிறு சேருமிடத்தில் வைக்கவும்.
4. உள்ளங்கைகள் மேல்நோக்கியவாறிருக்க முழங்கால்களின் மீது வைக்கவும். பின்னர் பெருவிரல் நுனியையும் சுட்டுவிரல் நுனியையும் சேர்த்து மற்றைய மூன்று விரல்களையும் நீட்டியபடி (சின்முத்திரை) பிடித்துக் கொள்ளவும். அமைதியாக நிமிர்ந்து இருந்து ஆழமாக சுவாசிக்கவும். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இருக்கலாம். – உச்ச நிலை
5. பின்னர் இடது காலை விடுவித்து நீட்டி வலது காலையும் விடுவித்து நீட்டி ஆரம்ப நிலைக்கு வரவும்.

### பலன்கள்

உடல் முழுவதும் சக்தி தொடர்ந்து சமமாகப் பரவும். நுரையீரல்களுக்கு அதிக பிராணவாயு செல்லும். இடுப்பு பலமடைந்து முள்ளந்தண்டு நேராகி சுறுசுறுப்பு அதிகரிக்கும். வஜ்ராசம் செய்வதால் ஏற்படும் முழுப்பலனும் கிடைக்கின்றன. முதுகு தண்டுவடம் நேராகும். நரம்புப் பலவீனம் இல்லாமல் போகும். குடற்புண்கள் வயிறு கோளாறுகள் நீங்கும். இரத்த நாடி நாளங்கள் விழிப்படைகின்றன. மனம் அமைதியடையும்.


### குறிப்பு:

தியானம் மற்றும் பிராணாயாமப் பயிற்சிகளுக்கு மிகவும் பொருத்தமான ஆசனமாகும். இவ்வாசனத்தில் எவ்வளவு நேரமானாலும் இருக்கலாம். எந்த நேரமும் இவ்வாசனத்தைச் செய்யலாம். உடல் உபாதைகள் உள்ளவர்கள் தகுந்த குருவின் ஆலோசனையுடனேயே செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**34ஆம் ஆண்டு நினைவு** | **31ஆம் நாள் நினைவு**





தோற்றம் 07.02.1940 — மறைவு 22.04.1987

அமரர் திரு.
**சுப்பிரமணியம் செல்வஸ்ரீ**

தோற்றம் 29.11.1942 — மறைவு 21.03.2021

அமரர் திருமதி
**செல்வஸ்ரீ மலர்நாயகி**

கடந்த 21.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலமாகிய எம் அன்னையின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (20.04.2021) செவ்வாய்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:-** என் அன்னையுடன் அன்பாக பழகிய உள்ளங்களை அறிந்திருக்க முடியாமையினாலும், எனது சோகத்தினால் வந்திருந்த உற்றார், உறவினர்களை கவனிக்க தவறியமையினாலும், தனித் தனியே அழைப்புக்களை வழங்க முடியாமையினால் இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக கருதி அனைவரும் வருகை தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**யாமா வீதி,**
**உடுவில் தெற்கு,**
**மானிப்பாய்.**

**அன்புமகன்**
**ரமேஸ் (ஸ்ரீதர்)**
**075 049 2044**

# 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 15 . 01 . 1944



விண்ணில் 19 . 04 . 2003

*அமரர் திருமதி*

## கந்தசாமி சிவநாயகி (கிளி)

(திருநெல்வேலி கிழக்கு)

*திதி: திருதியை (29.04.2021)*

தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை என்பதை
தரணியில் எமக்குணர்த்திய தெய்வத்தாயே!
உங்கள் கருவறையில் எம்மை சுமந்தும்
பண்புடனும் வளர்த்தும் வாழ்வித்தாயே!
காலங்கள் பல கழிந்தாலும் அழியாது உங்கள் நினைவு

**குடும்பத்தினர்**

**இல.20, முதலாம் ஒழுங்கை,**
**சின்னப் புதுக்குளம், வவுனியா.**
**024 205 2527**

# திருமண, விழாக்கள்

கொவிட் 19 - சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி
**திருமண விழா, பூப்புனித நீராட்டு,**
**விழா பிறந்ததின விழா, கலந்துரையாடல்கள்** போன்ற வைபவங்களை விசாலமான சகல வசதிகளுடன், குளிரூட்டப்பட்ட மண்டப ஒழுங்குகள் மிகக் குறைந்த செலவில் செய்துகொடுக்கப்படும்.

**பிள்ளையார் இன்**
**இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 221 5167,021 222 2829**

# புதிய முத்துச்சப்பறம்

அச்சுவேலியிலிருந்து
ஆலயங்களுக்கு தேவையான
முத்துச்சப்பறம், அன்னச் சப்பறம்,
படல் சப்பறம், பைவர் சப்பறம்
போன்றன மிகக் குறைந்த
வாடகையில் பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்பு**
**சிவஸ்ரீ பா. மனோகரக்குருக்கள்**
**தீர்த்தாங் குளம், அச்சுவேலி**
**077 725 4627**

# பைவர் கிளாஸ் தொழிலகம் (ஜிப்சம் மோல்டிங் சேவைகள்)

மணவறை பரகம் மற்றும் ஏனையவையும்
ஒடருக்கு செய்து தரப்படும்.
**வேம்பிராய் வீதி, மந்துவில்.**
**076 883 7047**

# மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

## நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 112ம் பிரிவின் கீழான அறிவித்தல்

01. சுப்பிரமணியம் கணேசதாஸ்
02. சின்னராசா தங்கவடிவேல்
03. பொன்னுத்துரை லோகேஸ்வரன்

மூவரும் முறையே தலைவர், செயலாளர், பொருளாளர் நிர்வாக சபை ஞானவைரவர் கோயில், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

மனுதாரர்கள்

**வழக்கு இல - நம்பிக்கைச் சொத்து / 32 / 2020**

மேற்படி வழக்கின் வழக்காளிகள் அச்சுவேலியில் அச்சுவேலி தெற்கில் அமைந்துள்ள ஞானவைரவர் கோயில் நிர்வாகசபையின் முறையே தலைவர், செயலாளர், பெருளாளர் என்ற வகையிலும், அப் பதவி வழியில் குறித்த கோயிலின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகவும் இருக்கும் நிலையில் குறித்த கோயிலின் முறையான வழிபடுவோரின் பயனுக்கென இருந்து வருவதான பின்வரும் பட்டியலில் குறிப்பிடப்படும் அசையும், அசையாச் சொத்துக்கள் சகலவற்றையும் கோயிலின் முறையான வழிபடுவோரின் நலனுக்கென குறித்த சொத்துக்களை முறையாக நிர்வகிப்பதற்கு அவசியப்படும் வகையில் அவற்றின் உடமை, கட்டுப்பாடு, கட்டுக் காப்பு, முகாமைத்துவம் ஆகியவற்றில் வைத்திருக்க வேண்டிய தேவை எழுந்துள்ள நிலையில்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் மேற்குறித்த வழக்கைத் தாக்கல் செய்து குறித்த அசையும் அசையாச் சொத்துக்கள் யாவற்றையும் கோயிலின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என்ற வகையில் தம்மிடம் ஒப்படைக்கும் கட்டளை ஒன்றைக் கோரி விண்ணப்பித்துள்ள நிலையில்

மன்று குறித்த விண்ணப்பம் தொடர்பில் எவராயினும் நபருக்கு/ நபர்களுக்கு கோரப்படும் ஒப்படைத்தற் கட்டளையை வழக்காளிகளுக்கு வழங்குவது தொடர்பில் ஆட்சேபனை / கள் உள்ளதா என்பதை அறியும் வகையிலாக பத்திரிகைப் பிரசுரமொன்றைச் செய்யுமாறு பணித்துக் கட்டளையிட்டுள்ள நிலையில்

குறித்த விண்ணப்பம் தொடர்பில் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப் படுகிறது. வழக்காளிகள் கோரி நிற்கும் குறித்த ஒப்படைத்தற் கட்டளைக்கு எவராயினும் நபர் ஆட்சேபனை/கள் முன்வைக்க விரும்பின் அதனை / அவற்றை 2021.07.01 திகதியன்று இம் மன்றில் நேராகவோ, சட்டத்தரணி மூலமாகவோ தோன்றித் தெரிவிக்குமாறு
தேவைப்படுத்தப்படுகிறீர்/கள்

2021 ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ந் திகதி


**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம்,**
**மல்லாகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நினைவஞ்சலி

ஆறாவது ஆண்டு ஆறாவது திங்கள்





22.09.1916 25.04.2015
கலாநிதி க.வைத்தீசுவரக்குருக்கள்
திதி : சித்திரை பூர்வபட்ச சப்தமி

14.09.1947 07.11.2020
திரு. வை. சச்சிதானந்தன்
திதி : ஐப்பசி அபரபட்ச சப்தமி

இறப்பு என்பது நியதி என்றாலும்
அதை ஏற்க மறுக்கின்றது எங்கள் உள்ளம்
உங்கள் ஆத்மா பிறப்பிறப்பில்லாப் பெருவாழ்வு வாழ
எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரரேசனைத் துதிக்கின்றோம்.

**உங்கள் பிரிவால் துயருறும்**
**அன்பு மகள்மார் - அன்புத் தங்கைமார்**
**வை.இராணி, வை.சாவித்திரி**

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 25 - 12 - 1945



மறைவு 11 - 05 - 2019

## அமரர் திருமதி மகேஸ்வரி மாணிக்கவாசகர்

**(கிளி அக்கா)**
**அம்மா ...... எங்கள் அம்மா;**

அன்பின் அம்மாவே அழியாத ஓவியமே
ஈன்ற தன்சேய்கள் நால்வரையும் - அன்புடனே
அரவணைத்து - நற்பண்போடும் அறிவோடும்
ஆற்றல்மிகு நெறிதவறாப் புதல்வர்களாய்
ஒரு கோட்டில் நின்று ஒன்றாய் இணைந்து
பயணிக்கப் பாதை காட்டிய - எம் அம்மாவே....
ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ? எங்களை விட்டுப்பிரிந்து
சிரித்த வதனமும்... உங்கள் அரவணைப்பும் எமக்குகிட்டிடுமோ?
ஊரொடும் உலகத்து உறவோடும்
ஒன்றாக மகிழ்ந்தே உறவாடி
இன்பத்திலும் துன்பத்திலும் தோள்கொடுத்து
இம்மண்ணில் நீங்காத நினைவில் நிற்கும் - எம் அம்மாவே
எழுபத்து மூன்று அகவைகண்டபோதும் - புதிராய்
புன்னகைகளும் பூரிப்பாய் வலம் வந்தவேளையில்
நோய் எனும் அரக்கன் வந்து வதைத்திட்ட போதும்
வதையின் வலியோடும் - வலிமை காட்டி
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே - இம்மண்ணில்
நீங்காத நினைவில் நிற்கின்ற எம் அம்மாவே
இரண்டு ஆண்டு என்ன? எத்தனை ஆண்டுகள்
கடந்து சென்றாலும் - எங்கள் நெஞ்சம் மறக்குமா? உங்களை
உங்கள் மலர் முகம் காணதரிசனம் தர-மாட்டீரா, அம்மா;
தேடுகின்றோம் உங்களை நாம்
உங்கள் ஆன்மா இறைவன் திருவடியில்
என்றும் இன்புற்று அமைதிபெற
இறைவனை தினமும் வேண்டுகின்றோம்
எம் அம்மாவே.....!

S.M.K. றேடர்ஸ்
No. 40 பிரம்படி றோட் , கொக்குவில்.

**குடும்பத்தினர்**

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**
**உப அலுவலகம், சுன்னாகம்.**
**வட்டாரம்-05, டாக்டர்.சுப்பிரமணியம் 3ம் ஒழுங்கை ,**
**ஆதன இல - 24/6**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட டாக்டர்.சுப்பிரமணியம் 3ம் ஒழுங்கை, சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்-துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம் - 05, டாக்டர். சுப்பிரமணியம் 3ம் ஒழுங்கை, ஆதன இல:24/6ல் Mr&Mrs கார்த்திகேசு எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு வினிதா செந்தில்குமரன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி தற்போது வலிகாமம் தெற்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று கந்தரோடை இறை, வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவு, J/200 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள "இனியா இலந்தையும் கம்பிராட்டியும் இலந்தை அடியும்" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 03 குழி 13.2 உடைய ஆதனமானது 2009.01.02 ஆம் திகதிய 494 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

அதன் எல்லைகளாக,
கிழக்கு - 9 அடிப்பாதை
வடக்கு - கோமதி அரசிளங் குமரனுக்குரிய ஆதனமும், மகாதேவனுக்குரிய ஆதனமும்
மேற்கு - பரமலிங்கம் பெண் கனகம்மாவிற்குரிய ஆதனம்
தெற்கு - தமிழ்க்கந்தையா வித்தியாசாலைக்குரிய ஆதனம்

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.முத்துக்குமாரசாமி அவர்களால் 1967.08.14இல் அளந்து தயாரிக்கப்பட்ட 3083 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 04 ஆகிய நிலப்பரப்பு 03 குழி 13.2 ஆகும். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு வினிதா செந்தில்குமரன் அவர்கள் மூலம் 2009.01.02 ஆம் திகதிய 495 ஆம் இலக்க சீதன உறுதியால், "தயா இல்லம்", கந்தரோடை, சுன்னாகம் என்னும் இடத்தை சேர்ந்த இராஜசிங்கம் தனராஜ் பெண் தயா (746580754V) எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேப்னை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது இராஜசிங்கம் தனராஜ் பெண் தயா எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை.**
**சுன்னாகம்.**

# 09 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 - 04 - 1939



உதிர்வு 28 - 04 - 2012

## திருமதி சிவரூபராணி (இந்திரா) செந்திவடிவேலு

**திதி: சப்தமி (19.04.2021)**

அன்பின் உறைவிடமாய் எமை அன்போடு அணைத்து
நாம் எல்லோரும் நலமோடு வாழ அன்பு மழை பொழிந்து
எமை வாழ வைத்த தெய்வமே!
ஆண்டுகள் ஒன்பது கடந்தாலும் உங்கள் நாமம்
எந்நாளும் எம் நெஞ்சங்களை விட்டகலாது

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

**மாதர் வளவு,**
**[illegible] ஒழுங்கை,**
**வல்வெட்டி,**
**வல்வெட்டித்துறை.**

**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் ஆண்டுகள் வரிசையில் இந்த ஆண்டு 'பிலவ' வருடமாகத் தொடங்கு கிறது. அதன்படி அனைத்து ராசிகளினதும் பலன்களைப் பார்ப்போம்.**

பிலவ வருட

# தமிழ்ப் புத்தாண்டு ராசி பலன்கள்




இயல்பிலேயே தன்மானமும் சுயகௌரவமும் அதிகம் கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே... அனைவருக்கும் உதவும் குணம் கொண்ட உங்களுக்கு இந்தப் பிலவ வருடத் தமிழ்ப்புத்தாண்டு எத்தகைய பலன்களை வழங்க இருக்கிறது என்று பார்க்கலாம்.

பொது : ராசிக்கு 6 ம் வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எதிர்பாராத திடீர் திருப்பங்கள் உண்டாகும். அலைச்சல் அதிகரிக்கும் என்றாலும் ஆதாயம் கூடும். குடும்ப வருமானம் உயரும் புது முயற்சிகள் வெற்றியடையும். கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போவது நன்மை பயக்கும். அடிக்கடி வரும் முன்கோபத்தைத் தவிர்ப்பது நல்லது.

குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துப் போவது நல்லது. வெளியூர் பயணம் ஆதாயம் தரும். ஆனி மாதத்தில் பயணங்களில் கூடுதல் கவனம் தேவை. செலவினங்களும் அதிகரிக்கும்.

பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வதைக் கண்டு மன நிம்மதி அடைவீர்கள். அவர்களின் மறதி மந்தம் விலகும். மகன் அல்லது மகளுக்கு சித்திரை, வைகாசி மாதங்களில் திருமணம் கூடி வரும். சகோதர உறவுகள் உதவுவார்கள். பூர்வீகச் சொத்துப் பிரச்னைகளில் நிதானம் கூடும். வழக்குகளில் வெற்றி உண்டு. இசை, இலக்கியம் ஆகியவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும் கடும் பாதிப்பு இருக்காது. முகப்பொலிவு கூடும். குழந்தையில்லாத தம்பதிக்கு ஆவணி மாதத்தில் குழந்தைப் பாக்கியம் உண்டாகும். கார்த்திகை, மாசி மாதங்களில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சொந்த ஊரில் மதிப்பு மரியாதை கூடும். புது வீடு, வாகன வசதி ஆகியவை உண்டாகும். மனதிலிருக்கும் குழப்பங்கள் தீரும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். பழைய கோயில்களைப் புதுப்பிக்க முற்படுவீர்கள். பிரபலங்களது நட்புக் கிடைக்கும். தக்க நேரத்தில் உதவுவார்கள். பழைய வீட்டை விற்று, புது வீடு வாங்குவீர்கள். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மருத்துவச் செலவுகள் குறையும். புதிய ஆடை ஆபரணங்கள் சேரும். உங்களால் வளர்ந்த சிலர் உங்களை வந்து சந்திப்பதால் திடீர் திருப்பங்கள் ஏற்படும். சில வேலைகள் உடனுக்குடன் முடிக்க புதிய அணுகுமுறைகளைப் பின்பற்றுவது நல்லது.

அக்கம் பக்கத்தாருடன் இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.

### குருபகவானின் பலன்கள்

14.4.21 முதல் 13.9.2021 வரை மற்றும் 13.11.2021 முதல் வருடம் முடியும் வரை குருபகவான் ராசிக்கு 4 இல் தொடர்வதால் பணிச்சுமை அதிகரிக்கும். உணர்ச்சிவசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெ டுக்கப் பாருங்கள். தாயாருக்கு உடல் உபாதைகள் வந்து போகும். உறவினர்கள் விஷயத்தில் தேவையின்றித் தலையிட வேண்டாம். சொத்துப் பிரச்னையில் கோர்ட், கேஸ் என்று போகாமல் சுமூகமாகப் பேசித் தீர்க்கப் பாருங்கள். இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தலைக்கவசம் அணிந்து செல்லுங்கள்.

விடுதலை கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். பிள்ளைகளின் அடிமனதில் இருக்கும் ஆசைகளைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உங்கள் மகளுக்கு ஏதோ ஒரு வகையில் தடைபட்டுக் கொண்டிருந்த திருமணம் இப்பொழுது கூடிவரும். உறவினர்கள், நண்பர்கள் வியக்குபடி கல்யாணத்தைச் சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள்.

### சனிபகவானின் பலன்கள்

உங்கள் ராசிக்கு 3 இல் சனிபகவான் இருக்கும் நிலையில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் இதுவரை செயல்படாது முடங்கியிருந்த நீங்கள், விஸ்வரூபம் எடுப்பீர்கள். சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். பிரபலங்கள் பட்டியலில் இடம் பிடிப்பீர்கள். உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உள் மனதில் தொக்கி நிற்கும் தாழ்வு எண்ணங்களைத் தூக்கி எறிவீர்கள். நகரின் எல்லையை ஒட்டியிருக்கும் பகுதியிலே நிலம், வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார், அல்லாதவர்கள் யார் என்பதை உணரும் சூட்சும புத்தி உண்டாகும்.

## தாழ்வு எண்ணங்களை தூக்கி எறிந்து இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள்

ஆனால் 14.9.2021 முதல் 12.11.2021 வரை குரு 3இல் சஞ்சரிப்பதால் காரியத் தடைகள் அதிகரிக்கும். முதல் முயற்சியிலேயே எந்த ஒரு வேலையையும் முடிக்க முடியாமல் இரண்டாவது அல்லது மூன்றாவது முயற்சியில் போராடி முடிக்க வேண்டி வரும். இளைய சகோதரர் ஆதரவாக இருப்பார். பழைய நண்பர்களில் ஒரு சிலர் விலகுவார்கள். பணத்தட்டுப்பாடு அதிகரிக்கும். தவிர்க்க முடியாத செலவினங்களும் வந்து போகும்.

### ராகு - கேதுபகவானின் பலன்கள்

ஆண்டு தொடக்கம் முதல் 20.3.2022 வரை ராசிக்குள் கேது நிற்பதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. வருடம் பிறக்கும்போது ராகு 7 இல் நிற்பதால் கணவன் மனைவிக்குள் கசப்புணர்வு ஏற்படும். சிலருக்குத் திருமணம் தள்ளிப்போகும். 21.3.2022 முதல் வருடம் முடியும் வரை கேது ராசியை விட்டு விலகுவதால் உடல் ஆரோக்கியம் மேம்படும். மருந்து மாத்திரைகளிலிருந்து

**உத்தியோகம் :** புதிய பொறுப்புகள் வரும். மூத்த அதிகாரி, உங்களின் அசாத்திய திறமையைக் கண்டு அதிசயிப்பார். சக ஊழியர்களுடன் இருந்த போட்டி, பொறாமை மாறும். சுமுக நட்பு உருவாகும். பதவி உயர்வு, சம்பள உயர்வு, வருடத்தின் மத்தியப் பகுதியில் எதிர்பார்க்கலாம். கலைஞர்களின் புதிய சிந்தனைகள் பாராட்டப்படும். கிசுகிசுத் தொல்லைகள் வந்து போகும். அயல்நாடு சென்று வருவீர்கள். அரசால் கௌரவிக்கப்படுவீர்கள்.

**ஏமாற்றங்கள், வெகுளித் தன்மை ஆகியவற்றிலிருந்து இந்தப் புத்தாண்டு உங்களை விடுபட வைத்து, காலத்துக்கு ஏற்பச் சில மாற்றங்களையும் உங்களைச் செய்ய வைக்கும்.**

## இன்றைய நாள்



**மேடம்**: முன்னேற்றம் காண்பீர்கள். உடன்பிறந்தவரின் அன்பு கிடைக்கும். உபரி நிதி சந்தோசம் தரும். உறவினர்களுடன் பேசி மகிழ்வீர்கள். சக ஊழியரிடையே சமாதானம் ஏற்படும்.

**இடபம்**: நிதித் தேவைகள் நிறைவடையும். சேமிப்பு அதிகரிக்கும். சுபச்செலவுகள் ஏற்படும். மனதில் சந்தோஷம் நிறையும். நல்லவர்களின் ஆதரவையும், ஆசியையும் பெற்று மகிழ்வீர்கள்.

**மிதுனம்**: எதிர்பார்த்த இடத்திலிருந்து சுபச்செய்தி வந்து சேரும். வருமானம் சற்றே உயர்வது பற்றிய செய்தி வந்து மகிழ்விக்கும். பெரியோர்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும்.

**கடகம்**: தனிப்பட்ட விஷயத்துக்காக அன்றாடப் பணிகளை மறக்காதீர்கள். சமூக அக்கறையுடன் செய்யும் செயல்களால் மனம் நிறையும். தொல்லை கொடுத்து வந்த மேலதிகாரி விலகுவார்.

**சிம்மம்**: தொழிலிலும் பணியிடத்திலும் இருந்து வந்த போட்டிகள் குறையும். குடும்பத்தில் ஒருவர் மாற்று மருத்துவத்தைத் தேர்ந்தெடுப்பார். பயம் தீரும். செலவுகள் குறையும்.

**கன்னி**: பெற்றோரை அனுசரித்து அவர்களை சந்தோஷப்படுத்துவீர்கள். அலுவலகத்தில் வரும் செய்தி ஒன்று அனைவருக்கும் மகிழ்ச்சி தரும். விரும்பிய உணவை உண்டு மகிழ வாய்ப்பு வரும்.

**துலாம்**:புதிய நபர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கலாம். கவனம் தேவை. தேவையின்றி பகையைச் சம்பாதிக்க வேண்டாம்.

**விருச்சிகம் :** செலவுகளையும் பேச்சையும் குறைத்துக் கொள்வது நல்லது. தவறு செய்யத் தூண்டுபவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள். சந்தோஷம் அதிகமாகும்.

**தனுசு**: பெற்றோரின் ஆரோக்கியம் மேம்படும். மனதில் நிம்மதி ஏற்படும். கூடுதல் முயற்சியால் நினைத்த விஷயம் நன்கு நிறைவேறும். முயற்சிகளுக்கு இப்போது பலன் கிடைக்கும்.

**மகரம்**: தடுமாற்றம் அகலும். உழைப்பால் நன்மை பெறுவீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவரின் சந்திப்பால் பிரச்னைகள் தீரும். இளைஞர்கள் முயற்சியால் முன்னேறும் நாள். அமைதி கூடும்.

**கும்பம்**: முயற்சிகளில் ஏற்பட்ட தடைகள் தீரும். புதிய நம்பிக்கை வரும். விலகிய சொந்த பந்தங்கள் உங்கள் முயற்சி காரணமாக இணையும். பணியிடம் முன்பை விட ஓரளவு திருப்தி தரும்..

**மீனம்** :நிதானத்துடன் செயற்பட்டு பிரச்சினையில் இருந்து விலகுவீர்கள். கடன் பிரச்சினையைக் குறைப்பதற்கு வழிகள் கண்டு மகிழ்வீர்கள். முயற்சிகளைத் தள்ளிப்போட வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்காக குரல்கொடுப்போரே இங்குள்ள மக்களுக்குத் தேவை!

## கௌரவிப்பு நிகழ்வில் மன்னார் ஆயர் சுட்டிக்காட்டு



**மன்னார், ஏப். 19**

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் சிறையில் அடைபட்டு இருப்போர் என பல வகையிலும் பல துன்பங்களுக்கு மத்தியிலும் வாழ்பவர்கள் எமது சமுதாயத்தில் இருக்கின்ற நிலையில் அவர்களுக்காக குரல் கொடுக்கின்றவர்கள் எம் மத்தியில் கட்டாயமாக தேவைப்படுகின்றார்கள் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.**

துணிச்சலுள்ள பெண்மணிக்கான சர்வதேச விருதைப் பெற்ற மன்னார் சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராஜாவுக்கு கௌரவிப்பு நிகழ்வு மன்னார் நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில் ஆயர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் வாழும் இந்தக் காலத்திலே மனித உரிமைகள் எமக்கு கொடுக்கப்படுகின்றனவா என்று தேடிப் பார்க்கின்ற இந்தக் காலகட்டத்தில் பல விதமான பிரச்சினைகள்தான் எழுகின்றன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், சிறையில் அடைபட்டு இருப்போர் என பல வகையிலும் பல துன்பங்களுக்கு மத்தியிலும் வாழ்பவர்கள் எமது சமுதாயத்தில் இருக்கின்றார்கள்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பாக மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் பேரருட் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை மரணித்ததன் பின்னர் ஊடகங்களின் ஊடாக தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட பல்வேறு செய்திகள் ஊடாக ஆயர் மக்களின் உரிமைகளுக்காக எவ்வாறு போராடினார் என்பதை உணர முடிகின்றது.

எங்கள் சமுதாயத்திலே மக்களுக்காக வாதாடுகின்றவர்கள், மக்களினுடைய பிரச்சினைகளை அறிந்து அவர்களுக்காக குரல் கொடுக்கின்றவர்கள் கட்டாயமாகத் தேவைப்படுகின்றார்கள்.

அந்த வகையிலே சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராஜா, இளம் வயதில் அவருடைய கெட்டித்தனத்தால் மக்களுக்காக குரல் கொடுத்துத்தான் துணிச்சலுள்ள பெண்மணிக்கான சர்வதேச விருதைப் பெற்றுக்கொண்டுள்ளார் - என்றார். (து- 213)

# மாங்குளத்திலுள்ள மலசலகூடங்களை பொதுப்பயன்பாட்டுக்கென மாற்றுக

## மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப். 19

**முல்லைத்தீவு - மாங்குளத்தில் உள்ள மலசல கூடங்களை பொதுப் பயன்பாட்டுக்கென மாற்ற வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

**இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:**

மாங்குளம் சந்தைப் பகுதியில் உள்ள பொது மலசலகூடங்களை மாங்குளம் நகரத்துக்கான பொது மலசலகூடமாக மாற்றுவது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை அமர்வுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

15 நாள்களுக்குள் குறித்த மலசலகூடங்களை மாங்குளம் நகரத்துக்கான பொது மலசல கூடங்களாக மாற்றுவது என பிரதேச சபையிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆனால் ஒரு மாதம் கடந்தும், அவற்றை மாங்குளம் நகரத்துக்கான பொது மலசலகூடங்களாக மாற்றுகின்ற வேலைகள் நடைபெறவில்லை.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பொறுப்பில் உள்ள பஸ் நிலையம் கால்நடைகளின் உறைவிடமாகவும், புதிய மலசலகூடங்கள் பாவனைகளற்ற நிலையில் சேதமடைந்தும் வருகின்றன.

பெருமளவு நிதியில் அமைக்கப்பட்ட மலசல கூடங்கள் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு மாற்றுவதில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்றனர். (ஐ-13)

# தாக்குதல் நடத்தியோர் பிணையில் விடுவிப்பு

கிளிநொச்சி, ஏப். 19



கிளிநொச்சி முரசுமோட்டை பகுதியில் பெண் உட்பட மூன்று பேர் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நான்கு பேரும் தலா இரண்டு லட்சம் பெறுமதியான ஆள் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பொருள்கள் வாங்கிவரவென்று கடந்த 13 ஆம் திகதி இரவு கடைக்குச் சென்ற இரண்டு சகோதரர்கள் மீது மதுபோதையில் இருந்தனர் என்று கூறப்படும் சிலர் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதனைத் தட்டிக் கேட்கச் சென்ற அவர்களது தாயார் மீதும் அந்தக் குழுவினர் தாக்குதல் நடத்தினர்.

அவர்கள் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் அந்தக் குழுவினர் அறுத்துச் சென்றிருந்தனர் என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டனர் என்ற அடிப்படையில் நான்கு பேரை கிளிநொச்சி பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்திருந்தனர்.

**விசாரணையின் பின்னர் கிளிநொச்சி நீதிவான் எஸ். பாலசுப்பிரமணியம் முன்னிலையில் முற்படுத்தினர். அதன்போதே அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் மீதான வழக்கு ஓகஸ்ட் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.** (து-113)

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானோர் மறியலில்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த இரண்டு இளைஞர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இருவரும் ஸ்கைப் தொழில்நுட்பத்தினூடாக பருத்தித்துறை நீதிவானிடம் முற்படுத்தப்பட்டபோதே, அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் போடப்பட்டுள்ள வீதித் தடையை மீறி, கடந்த வெள்ளிக்கிழமை பயணித்த கெப் வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதன்போதே 23 மற்றும் 26 வயதான இளைஞர்கள் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். குறித்த நபருக்கு வயிற்றில் துப்பாக்கிச்சூட்டுக் காயமேற்பட்டதால் அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். காலில் துப்பாக்கிச்சூட்டு காயமேற்பட்ட மற்றைய நபருக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து-இ)

# இலங்கை மீனவர்களை விடுவித்தது மியான்மர்

கொழும்பு, ஏப். 19

மியான்மார் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 12 இலங்கை மீனவர்களை மியான்மர் அதிகாரிகள் விடுவித்துள்ளனர் என்று மியான்மருக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதத்தில், இந்த இலங்கை மீனவர்கள் மியான்மர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-இ)

# மரக்கடத்தல் வாகனம் மோதி ராணுவத்தினர் படுகாயம்

வவுனியா, ஏப். 19

மரக் குற்றிகளை கடத்திச் சென்ற வாகனம், சோதனைச் சாவடியில் நின்ற இராணுவத்தினரை மோதித் தள்ளியது. அதில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியா ஓமந்தை நகர்பகுதியில் அமைந்துள்ள சோதனைச்சாவடியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

ஏ-9 வீதியூடாக வவுனியா நோக்கி மரங்களை ஏற்றிச் சென்ற வாகனத்தை, ஓமந்தை நகர்ப்பகுதியில் அமைந்துள்ள சோதனைச்சாவடியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் வழிமறித்துள்ளனர்.

இதன்போது மரக்கடத்தல்காரர்கள் வாகனத்தை நிறுத்தாமல் சென்றுள்ளனர். கடமையில் இருந்த இராணுவத்தினரை வாகனம் மோதித்தள்ளியது.

இதன்போது, நீண்ட தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் வீதியில் தூக்கி வீசப்பட்டார். மற்றொரு சிப்பாயும் காயமடைந்தார். காயமடைந்தவர்கள் உடனடியாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மரங்களைக் கடத்திச்சென்ற வாகனம் வீதிக்கரையில் விபத்துக்குள்ளாகி நின்றது. சாரதி தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4,110,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீன் மீதான தடை நடைமுறையில் இல்லை!

## பொலித்தீன் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு,ஏப்.19**
**பொலித்தீன் உற்பத்திகள் சிலவற்றை அரசு தடை செய்திருந்தாலும், அது தொடர்பான சட்டம் நடைமுறையில் இல்லை என்று அகில இலங்கை பொலித்தீன் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**



இது தொடர்பில் பொலித்தீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அநுர விஜேசிங்க தெரிவித்ததாவது, 6 வகை பொலித்தீன் உற்பத்திகளுக்கு, கடந்த மாதம் 31ஆம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில் அரசு தடை விதித்தது. எனினும் இத் தடை மூலம், எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் உரியவாறு நிறைவேற்றப்படவில்லை. தடை விதிப்பதன் மூலம் மாத்திரம், இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. 20 மில்லிமீற்றருக்கு குறைந்த அளவான வகை பொலித்தீன் பைக்கற்றுக்கள் தடை செய்யப்பட்டுள்ளன. எனினும், அதே கொள்ளளவையுடைய, சோஸ் மற்றும் மருந்து பைக்கற்றுக்களுக்குத் தடை விதிக்கப்படவில்லை. இவற்றினூடாக, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படதா? எனக் கேள்வி எழுப்பட்டுள்ளது. (ப-4)

# திருக்குறளின் வழியில் பயணிப்பது சிறந்தது!

## முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அறிவுரை

முல்லைத்தீவு, ஏப்.19
திருக்குறளில் கூறப்பட்டுள்ளதுபோல் வாழ்வை அமைத்துக் கொண்டால் பிரச்சினைகள் ஏற்படாது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார். மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற திருக்குறள் விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது
2000ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறளிலே வாழ்வுக்கு ஏற்ற வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. அவ்வழிமுறைகளை நாம் பின்பற்றுவதில்லை. செய்நன்றியையே மறந்து செயற்படுகின்றோம். இல்லறம் தொடர்பாக திருக்குறளில் கூறப்பட்டுள்ள விடயங்களை கடைப்பிடித்தாலே குடும்பங்களில் பிரச்சினைகள் ஏற்படாது. தற்போது இளவயது திருமணங்கள் அதிகரித்துக் காணப்படுவதுடன் அவற்றில் அதிகமானவை பிரச்சினைகள் ஏற்பட்டு நீதிமன்றம் வரை செல்கின்றன.
திருக்குறளிலே வாழ்வின் எல்லாப் பக்கங்களுக்குமான அறிவுரைகள் இருக்கின்றன. ஆனால் நாம் அவற்றைக் கடைப்பிடிப்பதில்லை. இளைய தலைமுறை திருக்குறள் வழியிலே பயணிக்க வேண்டும். ஒருவர் செய்கின்ற உதவியை எப்போதும் மறக்கக் கூடாது என்பது திருக்குறளில் கூறப்பட்டுள்ளது. இதனை எல்லோர் மனங்களிலும் விதைக்க வேண்டும் - என்றார். (ஐ-13,9,110)

# தென்மராட்சியில் காணியற்றோருக்கு நேர்முகத்தேர்வு

சாவகச்சேரி, ஏப்.19
தொழில் முயற்சியில் ஈடுபடவுள்ள தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த காணியற்ற மற்றொரு தொகுதி இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு காணி வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு பிரதேச செயலக மண்டபத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன.
காணி கோரி விண்ணப்பித்தவர்கள் பிரதேசத்தில் தமக்கு சொந்தக் காணி இல்லை என்பதை உறுதிப்படுத்தும் சமாதான நீதிவானின் சத்தியப் பத்திரம், வழங்கப்படவுள்ள காணியில் மேற்கொள்ளவுள்ள தொழில் தொடர்பான திட்ட முன்மொழிவு ஆகியவற்றைக் கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே சத்தியப் பத்திரம் மற்றும் திட்ட மொழிவு சமர்ப்பிக்கப்படாத பலரின் விண்ணப்பங்களை நிராகரிக்கும் நிலை காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பொறுப்பற்ற விதத்தில் கருத்துரைப்பது அழகல்ல

## த.வி.கூட்டணியின் செயற்பாட்டாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19
மூத்த அரசியல்வாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் பொறுப்பற்ற விதத்தில் கருத்துக்களை, விமர்சனங்களை முன்வைப்பது என்பது தமிழ் மக்களது ஆரோக்கியமான அரசியலை எதிர்காலத்தில் கொண்டுசெல்ல முடியாத சூழலை ஏற்படுத்தும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாட்டாளர் அரவிந்தன் தெரிவித்துள்ளார். யாழ்.ஊடக அமையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அரவிந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெறுப்பற்ற விதத்தில் கருத்துகளை தெரிவிப்பதைத் தவிர்த்து, தங்களது கருத்துகளை வாதப் பிரதிவாதங்களூடாக முடிவுகள் எடுக்கக் கூடிய வாறான பொதுத்தளத்தை உருவாக்க சிவில் அமைப்புகள் முற்பட்ட போதும் அரசியல் சக்திகள், அரசியல் கட்சிகள் அதற்கு ஆதரவு வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன. இந்த நிலைமை காரணமாக தமிழரது அரசியல் சரியான முறையில் கையாளப்படவில்லை. தேர்தலுக்காக மட்டும் இந்தத் தளத்தைப் பயன்படுத்தாமல் வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்சினையை கையாளக் கூடிய பொதுத் தளமாக பயன்படுத்த வேண்டும். மாகாண சபையை இல்லாமல் ஆக்குகின்ற சிந்தனையில் அரசு இருக்கின்ற நிலையில் நாங்களும் சிதைவடைந்து போகின்ற வேலைத்திட்டங்களில் ஈடுபடுவதைக் கைவிட வேண்டும். தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி செயற்படுகின்ற தமிழ்க் கட்சிகள் பொறுப்புடன் செயற்படுவதன் மூலம் தமிழர் அரசியலை நல்ல நிலைக்கு கொண்டு செல்ல முடியும் -என்றார். (ப-20)

# நிவாரணக் கொடுப்பனவு கிடைக்காதோருக்கு விரைவில் 5,000

யாழ்ப்பாணம், ஏப். 19
யாழ்ப்பாணம் மாவட்டத்தில், புத்தாண்டு நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படாத, தகுதிபெற்ற குடும்பங்களுக்கு, அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
5 ஆயிரம் ரூபா புத்தாண்டு நிவாரணக் கொடுப்பனவுக்காக, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 178 குடும்பங்கள் தகுதி பெற்றுள்ளன.
அவற்றில் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 855 குடும்பங்களுக்கு இதுவரையில் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# நிர்வாக சபை தெரிவு

மட்டுவில், ஏப்.19
மட்டுவில் வடக்கு கமக்காரர் அமைப்புக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த வியாழக்கிழமை தென்மராட்சி கமநல சேவைகள் திணைக்கள பெரும்போக உத்தியோகத்தர் முன்னிலையில் நடைபெற்றது.
தலைவராக இ.சுதர்சன்,உப தலைவராக .நா.கஜதீபன், செயலாளராக தெ.திருவேரகன், உபசெயலாளராக ஞா.நிரோஜன்,பொருளாளராக சி.கனகரத்தினம் ஆகியோருடன் நிர்வாக உறுப்பினர்களாக சி.தங்கரத்தினம், செ.யோகநாதன் ,ந.பத்மநாதன், சச்சிதானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-159)

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட கற்கை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 19
சப்ரகமுவ பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை நாளை ஆரம்பிப்பதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதன்படி தொழில்நுட்ப பீடத்தின் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளே முதலில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதேவேளை அனைத்து நிறுவனங்களின் கல்வி நடவடிக்கைகளும் சுகாதார வழிகாட்டுதல்களின்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசு வலியுறுத்தியுள்ளது.
கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்ட மேல் மாகாணத்திலுள்ள தஹம் பாடசாலைகள் நேற்றுத் தொடக்கம் மீளத் திறக்கப்பட்டுள்ளன.
இலங்கை முழுவதும் உள்ள அனைத்து தஹம் பாடசாலைகளிலும், இனி ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் கல்வி நடவடிக்கைகள் இடம் பெறும் என புத்த விவகார ஆணையகத்தின் ஆணையாளர் ஜெனரல் சுனந்த காரியபெரும கூறியுள்ளார். (தஇ)

# சாவ. வர்த்தகர்களுக்கு எழுமாற்று பி.சி.ஆர்.

சாவகச்சேரி நகர வர்த்தகர்களுக்கு எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனை எதிர்வரும் 22 ஆம் திகதி நவீன சந்தைக் கட்டடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
புத்தாண்டு வியாபாரத்தில் ஈடுபட்ட புடவை வியாபாரிகள் மற்றும் அங்கு கடமையாற்றியவர்கள் உள்ளிட்ட புத்தாண்டு வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்கள் அனைவரையும் இப் பரிசோதனையில் கலந்துகொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



## Dr.ஆறுமுகம் ராமநாதன்

Dr.ஆறுமுகம் ராமநாதன் அவர்கள் காலமானார். அன்னார் லீலாவதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவபுரத்தரசன், காலஞ்சென்ற சிவவீரசிங்கம், வேல்முருகன், சிவமங்கையற்கரசி (இந்தியா), காலஞ்சென்ற சிவதேவி, Dr.ஸ்ரீதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் சுபன் (அவுஸ்திரேலியா), கஜந்தி (கனடா), ஜெயந்தி (இலங்கை), சுகந்தி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் செல்வராஜா (இலங்கை), ராஜகுமார் (கனடா), ராஜன் (கனடா), சாந்தமலர் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜன், அபர்னா, விவேக், வெங்கட், வைஸ்ணவி, அபிராமி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் இசெபெல்லா, தாஜ், சாய், துர்க்கா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 18.04.2021 நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிமுதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பொரளை கனத்தை மயான இந்துப்பிரிவில் மாலை 3.00 மணியளவில் தகனக் கிரியைகள் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
Tel : 077 3551963, 0777 680999


# அதிகாரத்தை பலப்படுத்தவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்!

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.19**

**உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டுத் தாக்குதலானது , மதத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதல்ல. சிலரது அரசியல் அதிகாரங்களைப் பலப்படுத்திக் கொள்ளவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நியாயத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும்.**

இவ்வாறு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதின குண்டு தாக்குதல்களின் போது உயிரிழந்தவர்களை நினைவுக் கூருவதற்காக , பொரளை மற்றும் மாதம்பிட்டி பொது மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிகளை நேற்று ஞாயிற்றுக் கிழமை பேராயர் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை திறந்தார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மனித வாழ்க்கை என்பது மிகவும் பெறுமதி மிக்கதாகும். அதை எந்தவொரு பொருளுடனும் ஒப்பிட்டு தாழ்த்திப் பேச முடியாது. சுயநல எண்ணங்கள் நிறைந்த உலகத்தில் மனித உயிர்கள் மிகவும் தாழ்த்தப்பட்டு மதிப்பிடப்படுகின்றன.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதலானது , மதத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதல்ல. சிலரது அரசியல் அதிகாரங்களைப் பலப்படுத்திக் கொள்ளவதற்காக முன்னெடுக்கப்பட்டதாகும். அதனால் மதத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக இந்த தாக்குதல் இடம்பெறவில்லை.

இது தொடர்பில் இலங்கையர் என்ற வகையில் நாம் வெட்கமடைய வேண்டும். எமது சுயநலத்திற்காக இன்னுமொரு மதம் , இனம் மற்றும் மொழியைச் சார்ந்தவரை நாம் துன்புறுத்தியுள்ளோம். தனது பலத்தை காண்பிப்பதற்காக இன்னொருவரை கொலைச் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இதே வேளை ஒரு மதம் , இனம் அல்லது மொழியைச் சார்ந்தவர்களுக்கு இடையூறு செய்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் காரணமாக முழு உலகமே அசுந்தமானதாகவே விளங்கும். அதனால், அனைவரும் தங்களது வாழ்க்கையில் மற்றுமொருவரின் வாழ்வுக்கு உதவிகளை செய்வதை வழக்கமாக்கி கொள்ள வேண்டும். அதே வேளை உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். என்றார். (எ-இ)


## 41ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 01 • 07 • 1937

இறைவனின் அடியில் 10 • 03 • 2021

கடந்த 10.03.2021 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் கந்தையா மாணிக்கம் (பேத்தி)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (19.04.2021) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மடத்தடி,
சண்டிலிப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்



## அமரர் சொக்கலிங்கம் கோபாலசிங்கம்

**( B.Sc தொழிலதிபர், உரிமையாளர், கரும்புத்தோட்டம், ஸ்கந்தபுரம்)**

கோண்டாவில் குமரகோட்டத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சொக்கலிங்கம் கோபாலசிங்கம் (அக்கராயன் ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்ட உரிமையாளர்) நேற்று (18.04.2021) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கலிங்கம் ஆச்சிமுத்து தம்பதியினரின் மூத்த மகனும், நாகலிங்கம் செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயமோகன் (கனடா), ஜெயகோபன் (கனடா), ஜெயறோகன் (கனடா), ஜெயபரன், ஜெயநந்தன் (பிரான்ஸ்), ஜெயவாசுகி (கொழும்பு), ஜெயகலையரசி ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமுதினி (கனடா), வித்தியா (கனடா), அருட்செல்வி (கனடா), தயாநிதி, பிரவீணா (மலேசியா), தனேஸ்குமார் (சிவசக்தி றேடர்ஸ்-கொழும்பு), செந்தூரன் (HNB Finance) ஆகியோரின் அன்பு மாமனாரும், சின்னத்துரை, காலஞ்சென்றவர்களான தியாகராசா, கனகரத்தினம், மற்றும் இராசரத்தினம், மகாலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசுப்பிரமணியம், ஜெயஈஸ்வரன், தங்கராசா, இராசேஸ்வரி, நடராசா, யோகராசா ஆகியோரின் மைத்துனரும், யஸ்ரின், சாய்ஹரி, சாய்கிறிஸ், அக்ஷயா, சாய்சரன், ஸ்ரீசாயினி, நேத்திரா, துசித்திரா, ஆதித்ரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவில் குமரகோட்டத்தில் அன்னாரின் இல்லத்தில் இன்று (19.04.2021) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


077 074 0351

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 • 12 • 1944



மறைவு 17 • 04 • 2021

### செபமாலை மரியான் சிங்கராஜர்

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை விதிவிடமாகவும் கொண்ட செபமாலை மரியான் சிங்கராஜர் 17.04.2021 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை மரியான் மரியசலோமைய் தம்பதி களின் அன்பு மகனும், கனகமணியின் அன்புக் கணவரும், சகாயராஜன் (பிரான்ஸ்), சகாயரெஜினோல்ட் (சுவிஸ்), சகாயயூட் (பிரான்ஸ்), சகாயமதிவதனி (பிரான்ஸ்), சகாயடயான் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர் பங்கராஸ், அமரர் அந்தோனிப்பிள்ளை, யேசுராஜா, அமரர் மரியதாஸ், தேவதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நத்தலின், சசிகலா, வினோதினி, ஸ்ரீவிக்னராஜ், மேரி ஜென்சிஜா ஆகியோரின் மாமனாரும், நிலானி, நந்தோன், நவின், கிஷானி, கிஷான், யுவின்ரன், யதுசன், பிரவின், கவின், அஸ்வின்,ஆருத் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு: ராஜன் (மகன்) பிரான்ஸ்-0033 631337683**
**டயான் (மகன்) பிரான்ஸ்)-0033 617197767**
**யேசுராஜா (தம்பி)-077 162 8283**
**தேவதாஸ் (தம்பி)-077 355 7864**

## வாழ்த்துகின்றோம்



மீசாலை வடக்கைச் சேர்ந்த

**திரு. கார்த்திகேசு நடராசா**


தனது 83 வது பிறந்த நாளை மனைவி, மக்கள், மருமக்கள், பேரக் குழந்தைகள் எல்லோருடனும் 18.04.2021 அன்று வெகு சிறப்பாக வதிவிடமான கனடாவில் கொண்டாடியுள்ளார்.

Best Wishes

லாழ்த்துவோர்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 • 01 • 1946



மறைவு 18 • 04 • 2021

### சுப்பிரமணியம் இராசையா (இளையதம்பி)

**(ஓய்வு பெற்ற சுகாதார பரிசாரகர்)**

கரணவாய் மத்தி குழவியடி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசையா நேற்று (18.04.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கெங்காதேவியின் அன்புக் கணவரும், கிருஸ்ணதாஸ் (ஆசிரியர் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), விஜிதா (சுவிஸ்), விஜயதாஸ் (மின்சார சபை ஊழியர் சாவகச்சேரி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகௌரி, நவரட்ணம், சுகந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஜன், வினுசா, அங்கவி, அனுவர்கன், துவீகன், அர்ச்சுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், இராசரத்தினம் (DRO), செல்லம்மா, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கெங்காதரன், காலஞ்சென்ற மங்கையற்கரசி (தங்கா), மற்றும் ரதிதேவி (தேவி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.04.2021) திங்கட்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**0778060223**
**0779671980**

தகவல்
குடும்பத்தினர்

## இதய அஞ்சலிகள்



மொழி ஞாயிறு

### சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்

**(கஸ்புஸ் சேர்- ஆங்கில பேராசான்)**

ஈன்ற பொழுதினில் பெரிதுவக்கும் தாயாக இருந்து தன்னினிய மாணவர்களை சான்றோர்களாக மிளிர வைத்து அதிலே பெருமை கண்டவர். எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளும் இன்றி கால நேரம் பார்க்காது கற்பித்தலை மேற்கொண்ட பெருந்தகை- திண்ணைக் கல்வி மரபின் தனித்துவத்தினை இறுதிவரை பேணிய பேராசான். ஆயிரமாயிரம் மாணவர்களின் அறிவுக் கண்ணை திறந்த ஞானி. அப்பேற்பட்ட பேறறிஞரிடம் நாங்கள் கற்கக் கிடைத்த வாய்ப்பு பூர்வ புண்ணியமே. ஆசானின் ஆத்மா சாந்தியுற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**மாணவர்கள்**
**கலாநிதி.S.விஜயகுமார் (சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம்)**
**K.பிரதீபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)**
**R.பார்த்தீபன் (சிரேஷ்ட முகாமையாளர்-LIC)**

## கேள்வி அறிவித்தல்

### சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2021

### (Grant for Village with Special Needs)

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியத்தின் கீழ் கேலக்குள மதகு (Culvert) நிர்மாணம், மந்துவில் வடக்கு ஒப்பந்தத்தின் கீழான பணக்கொடுப்பனவிற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம், அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட புனரமைப்பு வேலைக்காக கோருகின்றார்.
3. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. ஒப்பந்ததாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி / கட்டம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்வி-தாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule -5) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர் / செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 19.04.2021 தொடக்கம் 02-05-2021 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர் / செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரியில் 19-04-2021 ஆம் திகதி யிலிருந்து 03-05-2021 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக் கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2.000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறை களிட்டு தவிசாளர் / செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு 03-05-.2021 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கீழ் காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் (05-07-2021) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
11. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 27-04-2021 திகதி மாலை 14.30 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| தொடர் இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (Without Vat) (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/41(6)/2/PSDG (Special)/ 2021/01 | கேலக்குள மதகு நிர்மாணம் (Culvert) மந்துவில் வடக்கு | 3.46 | 90 நாட்கள் | C8/C7 வீதி நிர்மாணம் | 35,000.00 | 02-08-2021 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.**
**19.03.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தாபய அரசுக்கு...

அரசுக்கு எதிராக தற்போது பௌத்த பிக்குகளும் போர்க்கொடி தூக்கியிருந்த நிலையில் தற்போது அஸ்கிரிய பீடமும் அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் அந்த வேலைத்திட்டங்களால் நாட்டின் இறையாண்மைக்கும், தேசிய சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்படக் கூடாது. அவற்றை எதிர்ப்போம் என்று அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகர ஆணைக் குழு சட்ட வரைவு தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தச் சட்ட வரைவு தொடர்பான சர்ச்சையை, மகா சங்கத்தினருக்கு அரசு தெளிவுபடுத்த வேண்டும். இலங்கையின் சட்டக் கட்டமைப்புக்கு அப்பாற்பட்ட வேலைத்திட்டங்கள் நாட்டில் முன்னெடுக்கப்படக் கூடாது. இது போன்ற விடயங்களில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும். கொழும்பு துறைமுக நகர வேலைத் திட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது ஆரம்பிக்கப்பட்டது. தமக்கான இலாபத்தை இலக்காகக்கொண்டு தான் இந்த வேலைத்திட்டத்தில் சீனா முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. அதற்கமையவே இரு தரப்பு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் துறைமுக நகர ஆணைக்குழுவுக்கான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் நாட்டுக்குப் பாதகத்தை ஏற்படுத்தக் கூடிய விடயங்கள் காணப்படுகின்றன என்று விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அதன் உள்ளடங்கள் தொடர்பில் முறையாக மகா சங்கத்தினருக்கும், நாட்டு மக்களுக்கும் அரசு தெளிவுபடுத்தவில்லை. இது தொடர்பில் பரவலாக விமர்சிக்கப்படுகின்றமையால் அரசால் இதன் உண்மை நிலைமை என்ன என்பது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வேண்டும் - என்றார். (எ-22,4)

## நாய்க் கடிக்கு...

கடந்த 16ஆம் திகதி இவரைத் தெரு நாய் ஒன்று கடித்துள்ளது. இவர் தனியார் மருத்துவமனை ஒன்றில் தடுப்பூசி ஏற்றியுள்ளார். எனினும் தடுப்பூசி பயனிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

அன்றையதினமே அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்றுமுன்தினம் மாலை அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார்.

(எ-26)

## பல்கலை. நினைவுத் தூபி...

பல்கலைக்கழக நிர்வாகத்தின் நடவடிக்கைக்கு மக்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் பெரும் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து, அதே இடத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை மீள அமைக்க பல்கலைக்கழக நிர்வாகம் இணக்கம் தெரிவித்திருந்தது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தரால் அடிக்கல்லும் நடப்பட்டது. முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் என்ற பெயருடன் நினைவுத் தூபியை மீளமைக்கும் பணிகள் பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்புடன் கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி ஆரம்பமானது.

மீளமைக்கும் பணிகள் தற்போது நிறைவடைந்ததை அடுத்து, எதிர்வரும் 23ஆம் திகதி நினைவுத் தூபி திறந்து வைக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## புலிகள் மீளுருவாக்கம்!...

இளவாலை பொலிஸ் பிரிவில் இருவரும், கோப்பாய் மற்றும் பலாலி பொலிஸ் பிரிவுகளில் தலா ஒருவரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

அண்மையில் இந்தியாவில் ஆயுதங்களுடன் சிலர் கைதுசெய்யப்பட்டனர் என்றும், அவர்களுடன் இவர்கள் தொலைபேசி உரையாடல்களை மேற்கொண்டிருந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

அவர்கள் தற்போதும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில், அவர்கள் மேலதிக விசாரணைக்காக வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேவேளை, இதே குற்றச்சாட்டில் முல்லைத்தீவிலும் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். (எ-26)

## சகல பாடசாலைகளும்...

மாகாண பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதற்கான சுகாதார வழிகாட்டியானது கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது.

அந்த சுகாதார வழிகாட்டியின் அடிப்படையிலேயே இன்று சகல பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படும். பாடசாலைகளின் தொற்று நீக்கும் நடவடிக்கைகளை அந்தந்த பாடசாலைகளின் அதிபர்கள் குறித்த பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரைத் தொடர்பு கொண்டு மேற்கொள்ள வேண்டும்' என்றார். (ம-22)

## அன்னை பூபதியின்...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வழமையாக எங்களது அன்னையின் நாவலடியில் உள்ள சமாதிக்குச் சென்று அவரை நினைவுகூருவோம். ஆனால் இந்த ஆண்டு எங்களது குடும்பத்தை அங்கு சென்று அஞ்சலிக்க வேண்டாம் எனவும் மீறி அஞ்சலித்தால் கைதுசெய்யப்படுவீர்கள் எனவும் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நாங்கள் எங்களது அம்மாவை அவரை புதைத்துள்ள இடத்தில் அஞ்சலிக்க அனுமதி மறுக்கப்படுவது மிகவும் கவலைக்குரியது. இது அரசியல் சார்ந்த செயற்பாடு அல்ல. அன்னை பூபதி எனது தாயார், எனது தாயாரை நாங்கள் நினைவுகூருகின்றோம். அதில் எந்தவித பயங்கரவாதச் செயற்பாடும் இல்லை. எனது தாயார் அன்னையர் முன்னணி என்ற அமைப்பின் ஊடாக இந்திய இராணுவத்துக்கு எதிராகவே போராடி உயிர்துறந்தார். அவர் ஆயுதம் ஏந்தி போராட்டம் செய்யவில்லை. இந்த நாட்டிலிருந்து இந்தியப் படையை வெளியேற்றவே போராடினார். அவரை யாரும் பயங்கரவாதியாக சித்திரிக்கவேண்டாம்.

நாங்கள் எந்த அரசியல் கட்சியுடனும் இணைந்து எமது தாயை நினைவுகூரவில்லை. நாங்களும் எங்கள் உறவினர்களுமே அவரை நினைவுகூருகின்றோம். நினைவு நிகழ்வைச் செய்யவேண்டாம் என தெரிவிப்பது கவலைக்குரியது. -என்றார். (ப-150)

## தனியார் கல்வி...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தின் கல்விச் செயற்பாடுகள் தவிர ஏனைய அனைத்து விடயங்களுக்கும் விடுக்கப்பட்ட தற்காலிகத் தடை இன்னும் ஒரு வாரத்துக்கு நீடிக்கும்.

சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனையின் பிரகாரம், அரச மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் யாவும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் (இன்று முதல்) முழுமையாக செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்வியை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள இந்த நடவடிக்கைக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் -என்றார். (ம-20)

## மகன் தாக்கியதில்...

நாகேஸ்வரனுக்கும் மகனுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி, மோதலானது என்றும், அதில் நாகேஸ்வரன் பாதிப்படைந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் கடந்த 11ஆம் திகதி நடந்திருந்த நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நாகேஸ்வரன் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார்.

(எ-26)

## முத்தையா முரளிதரன்...

ளது என்றும் அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரான முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெட்டில் 800 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். தற்போது சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றுள்ள அவர் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியின் பந்துவீச்சு ஆலோசகராக உள்ளார். இவர் நேற்றுமுன்தினம் தனது 48 ஆவது பிறந்த நாளை கொண்டாடி இருந்தார்.

முரளிதரன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ள போதும், மேலதிக விவரங்களை நேற்றிரவு பெற முடியவில்லை.

(எ-இ)

## கோடி ரூபா...

தகவலுக்கமைய மன்னார் மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சியின் பணிப்பில், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலக, உப பொலிஸ் பரிசோதகர் திலங்க தலைமையிலான குழுவாலேயே, இந்தக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. 89 கிலோ 355 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சாவே கைப்பற்றப்பட்டுள்ளது.

கஞ்சா கொண்டுசெல்லப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனத்தை பறிமுதல் செய்த பொலிஸார் அந்த வாகனத்தில் இருந்த மூவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இவர்களில் இருவர் வவுனியா கூமாங்குளம் பகுதியையும், மற்றைய நபர் வவுனியா தவசிகுளம் பகுதியையும் சேர்ந்த 25, 44 மற்றும் 31 வயதுகளை உடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ப-213,60)

## நேற்றும் வடக்கில்...

மேலும் 14 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்றுக் கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பவற்றில் 386 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 14 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவராவார்.

திருநெல்வேலி பொதுச்சந்தை மற்றும் அதனை அண்டியுள்ள வர்த்தக நிலையங்களின் வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்கள் சுயதனிமைப் படுத்தலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனையில் 11 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. அவர் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர். என்றார். (ப-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 08 . 1966



மறைவு 18 . 04 . 2021

## அமரர் Dr. ஆறுமுகம் பார்த்திபன்

(போதனா வைத்தியாசலை, யாழ்ப்பாணம்)

பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் இல.18, கருவேப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட Dr.ஆறுமுகம் பார்த்திபன் நேற்று (18.04.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பேராசியர் வல்லிபுரம் ஆறுமுகம் மற்றும் செல்வராணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் செல்வராணி தம்பதியரின் அன்பு மருமகனும், சுமதியின் பாசமிகு கணவரும், காருண்யாவின் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை - 2019 - உயிரியல் பிரிவு மாணவி) அன்புத் தந்தையும், வாசவன் (UN.Habitat), வாணி (விரிவுரையாளர் யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்) ஆகியோரின் அருமைச் சகோதரரும், புஷ்பராஜா (விரிவுரையாளர், களனிப்பல்கலைக்கழகம்), ஸ்ரீதரன் (ஆஸ்திரேலியா), தனபால் (கனடா), வாசுகி (கனடா), வசந்தாதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18, கருவேப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு.
021 221 2004

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 05 . 1961



மறைவு 30 . 04 . 2020

## சண்முகநாதன் சத்தியவரதன் (சந்திரன்)

*திதி: வளர்பிறை சப்தமி*


பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"சத்தியகிரி"
செட்டிலேன்,
இணுவில் மேற்கு.
077 624 8930
077 258 5121

ச.புஸ்பலீலாவதி (தாய்)
ச.அன்பரசி (மனைவி)
ச.கஸ்தூரி (மகள்)
இ.ரவீந்திரநாதன் குடும்பத்தினர்
ச.அருள்வரதன்(சத்தியன்) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## நடராசா சிவசுப்பிரமணியம்



தோற்றம் 06.05.1937

மறைவு 18.04.2021

நாரந்தனை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவசுப்பிரமணியம் அவர்கள் 18.04.2021 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நடராசா சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி சிசுபாலராஜ ராஜேஸ்வரி (கமலா) அவர்களின் அன்புக் கணவரும், மணிமாலா, சியாமளா, றமேஸ், சிவப்பிரியா, சுவர்ணா, றட்னேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்றவர்களான மனோன்மணி, சிவமணி, சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பாலசுப் பிரமணியம் மற்றும் பேபிசரோஜா, கருணா, சிவபாலன், சரவணபவான் ஆகியோரின் அன்பு மைத்துனரும், உதயகுமார், பிரபாகரன், சிந்துஜா, வசந்தகுமார், ரதீஸ், மதுரா காலஞ்சென்ற இன்பம் மற்றும் சந்திரா, மேனகா, மலர்விழி, மதிகுமார், காலஞ்சென்றவர்களான உதயகுமார், ஜெயக்குமார், ஆகியோரின் அன்பு மாமனாரும் சாம்பவி, சங்கவி, நிகேஜன், சாருஜன், தேரினி, லக்சான், டனுஷன், குகஷாத், பிவுசன், அபிநாத், பிரணவி, துஷாரா, பவீனா, மகா, சாத்விக், ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2021) திங்கட்கிழமை நாரந் தனையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் நாரந்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

**தொடர்புகளுக்கு**

றட்னேஸ் - + 417 955 133 59 (மகன் - சுவிஸ் )
றமேஸ் - + 447 766 207 536 (மகன் - லண்டன் )
சுவர்ணா - + 491 523 107 1461 (மகள் - ஜேர்மனி)
பிரபாகரன் - 076 232 5413 (மருமகன் - கிளிநெச்சி)
ரதீஸ் - 077 923 2560 (மருமகன் - கொக்குவில்)
மணிமாலா - 076 001 2448 (மகள் - ஆறுகால்மடம்)
உதயகுமார் - 077 160 5181 (மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசாரரின் மீது குற்றவியல் வழக்கு

## ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை

**கொழும்பு, ஏப். 19**

**பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று அரசிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதனால் விரைவில் ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

தென்னிலங்கையில் செயற்பட்டு வருகின்ற கடும்போக்குவாத பௌத்த அமைப்புக்களில் ஞானசார தேரர் தலைமையிலான பொதுபல சேனா அமைப்பு முன்னிலை வகித்து வருகின்றது. முஸ்லிம் மக்களுக்கு விரோதமான அமைப்பாகவே இது கருதப்படுகின்றது.

இனவாத செயற்பாடுகள், பேச்சுகள், மஹரகம மற்றும் அழுத்கம பகுதிகளில் ஏற்படுத்திய கலவர நிலைமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் ஞானசார தேரருக்கு எதிராகக் காணப்படுகின்றன. அத்துடன் ஈஸ்டர் தாக்குதல் பற்றிய விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில், பொதுபல சேனா அமைப்பு இனவாத செயற்பாட்டுக்கு ஊக்கமளித்து வருவதால் அதனை தடை செய்ய வேண்டும் என்கின்ற பரிந்துரையும் முன்வைக்கப்பட்டிருந்தது.

சிவில் மற்றும் அரசியல் உரிமை பற்றிய சர்வதேச பிரகடனத்துக்கு அமைவாக, ஞானசார தேரருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான பரிந்துரையை ஏற்கனவே ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்திருந்தது. இதன் காரணமாக தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. ஆனால், எந்த வகையிலும் அந்த அமைப்பின் மீதுதடையை அரசு பிரயோகிக்காது என அரச தரப்பு அமைச்சர்கள் பொது மேடைகளில் தெரிவித்து வருகின்றனர்.

ஈஸ்டர் தாக்குதல் பற்றி விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு ஒப்படைத்த அறிக்கையை மீளாய்வு செய்து பரிந்துரைப்பதற்காக அரச தலைவர் கோத்தாபய ராஜபக்சவால் அமைக்கப்பட்ட துணை அமைச்சரவைக் குழுவும் வழக்கு தாக்கல் செய்வதற்கான இந்தப் பரிந்துரையை முன்வைத்திருக்கிறது என தெரிவிக்கப்படுகின்றது. (த-இ)

# கொரோனா தீவிரம்

*உலக சுகாதார ஸ்தாபனம் அச்சம்*

சர்வதேச ரீதியில் கொரொனாத் தொற்று பரவல் அதிகரித்துள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் அச்சம் வெளியிட்டுள்ளது.

பல நாடுகளில் கடந்த இரண்டு மாதங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. பிரேஸில், இந்தியா, போலந்து, துருக்கி உள்ளிட்ட மேலும் சில நாடுகளில் கொரோனா பரவல் நிலை தீவிரமடைந்துள்ளது. னைத்துப் பிராந்தியங்களிலும் தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்றும் உலக சுகாதர்ர ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ப-4)



சித்திரை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் இணைந்து பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் படகோட்டப் போட்டிகளை நடத்தின. போட்டி களில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (யு-9)

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை.
**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்**
யாழ்ப்பாணம் 077 410 2724

**விற்பனைக்கு**

NP.LN 2177 வாகனம் 100/100
நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.
KM 26000 ஓடி உள்ளது.
முதலாம் ஓனர்
076 638 5516

# 400 கர்ப்பவதிகளுக்கு முருங்கை மரக்கன்றுகள்

மன்னார்,ஏப்.19

'வாழ்க்கைக்கான தோட்டம்' எனும் தேசிய வேலைத் திட்டத்துக்கு அமைய மன்னார் மாவட்டத்துக்கான முருங்கை மரக்கன்றுகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு முருங்கன் கமநல சேவைகள் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மன்னார் மாவட்டத்தில் 13 ஆயிரம் முருங்கை மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக 400 கர்ப்பவதிகளுக்கு முருங்கை மரக் கன்றுகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள் பணிப்பாளர் சிவராசா யோகராசா மற்றும் நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி. பரஞ்சோதி ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-213.9.111)

**வேலையாள்கள் தேவையா ?**

உங்கள் நிறுவன Vacancy களுக்கு பொருத்தமானவர்களை எம்மிடம் தெரிவுசெய்யலாம்.
(Office Work, Driver, Data Entry...)

**DEWMAS Job Bank**
51, Amman Road, Nallur.
dewmasweb.com
074 138 3368, 021 315 2500

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை கிழக்கு ஐயனார் வீதியில் 06 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
**(தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 m தூரம்)**
**பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (தரகர் தேவையில்லை)**
**ஒரு பரப்பு 5 இலட்சம்**
077 814 7389, 077 614 7333

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் உரும்பிராய் கோப்பாய் வீதியில், மெயின் றோட்டுடன் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 1½ பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை. (கோப்பாய் வீதி, கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமை) தொடர்பு கொள்ளும் நேரம் காலை 9.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரை
**தொடர்பு :**
077 288 0152, 077 203 6402, 077 468 3354

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 05 . 1973



மறைவு 14 . 04 . 2021

### திரு. ராஜ்குமார் சின்னையா

யாழ். மல்லாகம் சோடாக் கொம்பனி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Vreden ஐ வதிவிடமாகவும் கொண்ட ராஜ்குமார் சின்னையா அவர்கள் கடந்த (14.04.2021) புதன்கிழமை அன்று ஜேர்மனியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னையா, செல்வமணி தம்பதிகளின் பாசமிகு மகனும், மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகலிங்கம், இந்திராணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுஜி அவர்களின் அன்புக் கணவரும், பவி, தர்ணிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜனி (சுவிஸ்) அவர்களின் அன்புச் சகோதரரும், கருணாகரன் அவர்களின் அன்பு மைத்துனரும், அபிராமி, கரிகாலன் ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நேரடி ஒளிபரப்பு: லங்காசிறி
20th Apr 2021 8:00 AM (இல்ங்கை நேரம் 11.30 AM)

பார்வைக்கு :
Saturday, 17 Apr 2021 4:00 PM - 7:00 PM
Sunday, 18 Apr 2021 4:00 PM - 7:00 PM
Monday, 19 Apr 2021 4:00 PM - 7:00 PM
Traver Halle Friedhof, Berkelaue, 48691 Vreden, Germany

தகனம்:
Tuesday, 20 Apr 2021 8:00 AM - 11: 00 AM
Traver Halle Friedhof, Berkelaue, 48691 Vreden, Germany

**சோடாக்கொம்பனி ஒழுங்கை, மல்லாகம்.**

**தகவல்: குடும்பத்தினர் செல்வமணி - 076 213 9053**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 … கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.